Registered as a Newspaper பக்கங்கள் 12 விலை ரூபா 6-00

# ஈழநாதம்

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 6 20 - 05 - 1994 வெள்ளிக்கிழமை ஓசை 91

## மாணவர் ஊக்குவிப்பு திட்டம் நடைமுறை

மாணவர் தினமான யூன் ஐந்தாம் திகதி யாழ் மாவட்டப் பாடசாலைகளில் 'மாணவர் ஊக்குவிப்புத் திட்டம்'' நடைமுறைப்படுத்தப்படவுள்ளது யாழ்; கல்வித் திணைக்கள வலயம்1இனால் அறிமுகப்படுத்தப் படவுள்ள இத் திட்டத்தினால் மாணவர்கள் கல்வியின் நோக்கத்தினையும் அதன் குறிக்கோளையும் அறிந்து கொள்ளல், மாணவர்கள் தமது ஆளுமையைப் பல துறைகளிலும் விருத்தி செய்ய சந்தர்ப்பமளித்தல், சுயமதிப்பீடு மற்றும் தொடர் (12ஆம் பக்கம் பார்க்க)

# அரசியலில் நிச்சயமற்ற நிலை; முதலீட்டாளர் பெரும் தயக்கம்

## பங்குச்சந்தையில் பெரும் வீழ்ச்சி

(கொழும்பு)

**சிறிலங்கா அரசியலில் ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற தன்மையினால் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உற்பத்தித் துறையில் முதலீடு செய்வதில் பெரிதும் தயக்கம் காட்டி வருகின்றனர். இதன் காரணமாக சிறிலங்காவின் பொருளாதாரம் பெரிய நெருக்கடிகளை எதிர்நோக்கியிருப்பதாகக் கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

சிறிலங்காவில் உற்பத்தித் துறையிலும் பங்குச்சந்தை வர்த்தகத்திலும் புதிய முதலீடுகளைச் செய்ய உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தயக்கம் காட்டி வருவதாகக் கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் சிறிலங்காசுதந்திரக்கட்சி வெற்றிபெற்றால் அவர்கள் எவ்வாறான பொருளாதாரக் கொள்கையைக் கைக்கொள்வார்கள் என்ற சந்தேகமே முதலீட்டாளர்களுக்கு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது,

இதே சமயம், கொழும்பு பங்கு சந்தை வர்த்தகம் தொடர்ந்தும் தளம்பல் நிலையிலேயே உள்ளது. கடந்த வார முற்பகுதியில் பங் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தேயிலைத் தோட்டங்களை நிர்வகிக்க தனியார் தயக்கம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் தேயிலைத் தோட்டங்களை நிர்வகித்து வரும் இலங்கை நிறுவனங்கள் புதிய முதலீடுகளை மேற்கொள்வதில் தாமதம் காட்டி வருவதாக அதிகாரிகள் கூறுகின்றனர்-

தேயிலை விலைகளில் ஏற்பட்டுள்ளவீழ்ச்சி மற்றும்நடைபெறவுள்ள தேர்தல்களின் அடிப்படையில் அரசியலில் ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற நிலை ஆகியவற்றைத் தொடர்ந்தே இந் நிலை ஏற்பட்டுள்ளது-

''எதிர்கால நிலைமைகள் மிகவும் பிரகாசமானவையாக இல்லை'' என்று கூறும் மத்திய பகுதியிலுள்ள பெருந் தோட்டங்களை நிர்வகிக்கும் நிறுவனம் ஒன்றின் சிரேஷ்ட நிறைவேற்றுச் செயலாளர், முழுமையாகப் பார்க்கக்கூடிய ஒன்றாகவும் இல்லை எனவும் சுட்டிக்காட்டினார்-

## வலிவடக்கு பகுதியிலிருந்து 11 பொதுமக்கள் விடுவிப்பு

(வடமராட்சி)

இளவாலை, மாதகல் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றி வளைப்பின் போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 11பேர் விடுவிக்கப்பட்டு நேற்று மாலை யாழ். வந்து சேர்ந்தனர்.

நமசிவாயம்- சுந்தரமூர்த்தி வேலுப்பிள்ளை- சரவணமுத்து, சரவணமுத்து- பாக்கியலட்சுமி, சேதுபதி- பொன்னம்மா, மரியாம் பிள்ளை- பிலிப்பாச்சி, மனுவேற்பிள்ளை- றோசம்மா, வி. முத்தையா, கதிரன்- சின்னத்தம்பி, வெற்றிவேலு- கங்காதேவி, வன்னியசிங்கம்- செல்வலக்சுமி, வி. வன்னியசிங்கம் ஆகியோரே விடுவிக்கப்பட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ்.வதிவிட பிரதிநிதி மூலம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அஷ்ரப் ராஜினாமா

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்- எச்- எம்- அஷ்ரப் நேற்று தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்- திகாமடுள்ள தொகுதியில் 6 பிரதேச சபைகளிற்கு நடைபெற்ற தேர்தல்களில் ஒன்றில் தோல்வியுற்றாலும் தனது பதவியை ராஜினாமா செய்யப் போவதாக அறிவித்திருந்தார் என்பது தெரிந்ததே- ஆனால் இங்கு மூன்று பிரதேச சபைகளை மட்டும் முஸ்லிம் காங்கிரசால் கைப்பற்ற முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது-

## இன்று மூடப்பட்டிருக்கும்

அனைத்து அனுமதி வழங்கும் செயலகங்களும் இன்று திறக்கப்படமாட்டாது என்பதைப் பொது மக்களின் கவனத்திற்குப் போக்குவரத்துக் கண்காணிப்பு பிரிவினர் அறியத்தருகின்றனர்.

## திறக்கப்படமாட்டாது

நாளை குடும்ப அட்டை பகுதி அலுவலகங்கள் திறக்கப்படமாட்டாது என்பதை பொதுமக்களின் கவனத்திற்கு குடும்ப அட்டை பதிவு பகுதியினர் அறியத்தருகின்றனர்.

## சடலம் அடையாளம் காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கைதடிப் பகுதியில் இருந்து கடந்த 17ஆம் திகதி காவல் துறையினரால் மீட்கப்பட்டு அடையாளம் காண்பதற்காக யாழ் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் நேர்முக பரீட்சை;

## வவுனியா சென்ற மாணவர் ஏமாற்றத்துடன் திரும்பினர்

[வவுனியா]

ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு அழைப்புக் கிடைத்ததை அடுத்து வடபகுதியிலிருந்து பல கஷ்டங்களுக்கு மத்தியில் வவுனியா வந்த கலை, வர்த்தக பிரிவு மாணவர்கள் பலர் நேர்முகப் பரீட்சையும் இல்லை, வேலை வாய்ப்பும் கிடையாது என அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் பல்கலைக் கழகம் செல்லும் வரை ஊக்குவிப்புப் பணம் வழங்கி தற்காலிக ஆசிரியர்களாக நியமிக்கும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## காமினி திசாநாயக்கா எம். பியாக பதவி ஏற்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்கா நேற்றுக் காலை ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் உறுப்பினராக பாராளுமன்றத்தில் சபாநாயகரின் முன்பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்

தேசியப் பட்டியல் உறுப்பினர் எம், எச். எம் அமீட் தனது உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ததால் ஏற்பட்ட வெற்றிடத்தைத் தொடர்ந்து இவர் பதவி ஏற்றுக்கொண்டார்;

இது குறித்து பி, பி, ஸி தெரிவிக்கையில் காமினி திசாநாயக்கா நேற்று வெற்றிகரமாகப் பாராளுமன்றம் திரும்பினார். பரவலாக எதிர்பார்க்கப்படுவது போல் அவருக்கு ஓரிரு நாள்களில் அமைச்சர (12 ஆம் பக்கம் பார்க்க)

## காமினியை அழைத்து சென்ற சிறிசேனகூரே

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்கா நேற்று பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்க வந்தபோது அவரை அமைச்சர் சிறிசேன கூரே நெருக்கமான முறையில் அழைத்துச் சென்றதாக கூறப்படுகிறது-

பின்னர் காமினி திசாநாயக்கா பாராளுமன்ற உறுப்பினராக பதவிப்பிரமாணம் செய்ததை தொடர்ந்து முதல் முதலில் வாழ்த்து தெரிவித்தவர் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரே எனவும் தெரிய வருகின்றது-

இவரை பாராளுமன்றத்திற்கு கொண்டுவரும் முகமாகவே சிறிசேன கூரேயிடமிருந்து கட்சியின் பொதுச் செயலாளர் பதவி பறிக்கப் பட்டது என்பது குறிப்பிடத் தக்கது-

## புதிய எதிர்ப்புகளுக்கு முகம்கொடுக்கத் தயார்

### காமினி கூறுகிறார்

(கொழும்பு)

தற்போது தோன்றியுள்ள புதிய எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்கத் தான் தற்போது தயாராக இருப்பதாகவும் எதிர்கால சவால்களுக்கு புதிய முறையில் முகம் கொடுக்க தயாராகி வருவதாகவும் காமினி திசநாயக்க தெரிவித்தார்-

நேற்று பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதையடுத்து சபாநாயகர் அலுவலகத்தில் நடைபெற்றபத்திரிகையாளர் மாநாட்டில் மேற்படி கருத்தை அவர் தெரிவித்தார்-

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்; எனது வாழ்நாளில் அரைவாசிக் காலத்திற்கு மேல் ஐக்கிய தேசியக் கட்சிக்காக உழைத்தேன்- ஆனால் கட்சியில் ஏற்பட்ட ஜனநாயக மீறல் தொடர்பாக ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் நான் கட்சியிலிருந்து வெளியேற வேண்டியேற்பட்டது.

ஆனால் இன்று அந்தநிலை (12 ஆம் பக்கம் பார்க்க)

## நான் தனிமரமாகினேன் அமைச்சர் கூரே விரக்தி

(கொழும்பு)

''நான் தனிமரமாகிவிட்டேன். மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்; ஆனாலும் நான் தனியே என்ன செய்ய முடியும்?'' என வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரே தெரிவித்துள்ளார்.

''ஐ. தே. க. என்னைச் சலிப்படையச் செய்துவிட்டது'' என மேலும் தெரிவித்த அவர் கட்சி நலனில் அக்கறையுள்ள கட்சி விசுவாசிகள் ஒற்றுமையாகச் செயல்பட முன்வராவிட்டால், கட்சியின் எதிர்காலம் பாதிப்படையும் நான் தனியாக நின்று என்ன செய்ய முடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்-

## வரி விளம்பரம்

### மூலிகை கீரை

மூலிகை வகைகள், சத்துணவுக் கீரைவகை, பசளி, அகத்தி, சரிசலாங்கண்ணி, தவசி முருங்கை கன்று ஒன்று ரூபா. 10/- அவரை, கீரை விதைகள் பக்கற் ரூபா 5/- ''மில்க்வைற்''

(சி/9453)

### மே 15.19 செவ்வாய் ராகு, கேது மாற்றம்

பெண்களின் ருது ஜாதக பலன்கள் (பருவவளர்ச்சியும் சோதிட சாத்திரமும்) ரூ 10/- புதிய வெளியீடு எங்கும் விற்பனையாகின்றது. மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம் கனகா ரேடர்ஸ் திருநெல்வேலிச்சந்தி

(8314)

### வீடு காணி விற்பனைக்கு

மட்டுவில் திருக்கணித நிலையத்திற்கு அருகாமையில் 5 பரப்புடன் அமைந்துள்ள கல்வீடு விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும்: ஸ்ரீ விஷ்ணு முகவர் கோட்டடி சாவகச்சேரி

(8283)

### கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

சிவப்பு, கறுப்புச் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகாபதி'' மானிப்பாய்.

(8316)

### உடன் தேவை

8 அடி நீளமும் 10 அடிக்குள்ளும் கடைச்சல் பட்டடை (லேத்) அல்லது மினி லேத் விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும் தொடர்பு துரை மோட்டார் உயிரூட்டகம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.

(சி-9431)

### சுற்றாடற் கல்வி

சுற்றாடற்கல்வி செயல் நூல்கள் ஆண்டு 2,5) விற்பனையாகின்றன புதிய பாடத் திட்டத்திற்கமைய ஆக்கப் பெற்றவை. ஆக்கம்: இலக்கியவித்தகர் த. துரைசிங்கம், பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்:

(8317)

### மாப் போஷா

குடும்பத்திலுள்ள சகலருக்கும் ஏற்ற தரமான சத்துணவு பாம்போஷா ப.அ சபையின் கற்பகம் விற்பனை நிலையங்களில் விற்பனையாகின்றது.

(சி-9332)

### கண்டெடுப்பு

சிந்தாமணி ஜெயக்குமார் என்பவருடைய க.பொ.த (சா/த) பெறுபேற்று அட்டவணை ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்குரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
20-4 1914

மறைவு
20-4-1994



### அமரர் V.K. தாமோதரம்பிள்ளை

(நடராசா)

Retd. D O A. (Survey Dept.)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இறுதி மூச்சுவரை எம்மை வளர்த்து
அறிவினைப் புகட்டி அன்பினைப் பொழிந்து
அகிலத்தில் நம்மை வாழவைத்த அன்புத்
தெய்வமே ஐயாவே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புத்தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியை சிரம்தாழ்த்தி தெரிவித்துக் கொள்கிறோம்.

20-05-1994 வெள்ளிக்கிழமை நடைபெற இருக்கும் அந்தியேட்டி, சபிண்டீகரணம் ஆகியவற்றில் கலந்து கொள்ளுமாறும் எமது அன்புக்குரிய அனைவரையும் வேண்டிக் கொள்கிறோம்.

பிள்ளைகள்:- பூ.கமலரதி, க.தா. சிறீஸ்கந்தசிங்கம், நித்தியானந்தசிவம் வீமலரதி, தா பாலசிங்கம் (பிரான்ஸ்)

மருமக்கள்;- க. பூபாலசிங்கம், புஸ்பரதி. கௌரி (பிரான்ஸ்)

பேரப்பிள்ளைகள்:- மதிவதனா சுந்தரலிங்கம், தபேந்திரன், வசந்தா, சுகுணகுமார், குமுதினி, வினோதினி, மயூரன், கார்த்திகா, தர்சிகா, சோபிகா.

சகோதரர்கள்:- வி.க. சுப்பிரமணியம், ச. கதிராசிப்பிள்ளை, மா. வேதநாயகி.

'பெரியதோட்டம்'
கரவெட்டி மத்தி.

(5884)

## வலிகிழக்கு வடபகுதி ப. நோ. கூ. சங்கம் அச்சுவேலி கூட்டுறவுச் சுவையக திறப்புவிழா

இன்று (20-05-94 வெள்ளிக்கிழமை) முற்பகல் 9-00 மணியளவில்
யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர்
திரு. சி. இளம்பரிதி அவர்களால்

கூட்டுறவுச் சுவையகம்

(புத்தூர் பழைய மக்கள் வங்கிக் கட்டிடம்)

திறந்து வைக்கப்படும்.

உங்கள் இல்லங்களில் நடைபெறும் விசேட வைபவங்களுக்குத் தேவையான
சிற்றுண்டி வகைகள், கேக், மஸ்கட், மிக்ஸர், றோல்,
இனிப்புப் பண்டங்கள், ஆகியனவற்றுக்கு
சுத்தமாகவும் சுகாதாரமாகவும் நியாய விலையில் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்.

கூட்டுறவுச் சுவையகம்,
புத்தூர்.
(பழைய மக்கள் வங்கிக் கட்டிடம்)

- பணிப்பாளர்களும், பணியாளர்களும்
வ. கி. வ. ப. ப. நோ. கூட்டுறவுச் சங்கம்,
அச்சுவேலி.

(சி-9460)

## நினைவு கூருகின்றோம்...

### 20.05.1994

1985 -ம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய,

❋ எஸ். மயில்வாகனம் (கிரான் - மட்டு)

அரியாலையில் ஏற்பட்ட மின்சாரவிபத்தில் பலியான ஆதரவாளர்.

தனபாலசூரியர் ரஜந்தன் (கனகரத்தினம்வீதி- அரியாலை)

1987 -ம் ஆண்டு யாழ் - கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய, முன்னாள் மன்னார் மாவட்டத் தளபதியும், யாழ் மாவட்டத் தளபதியுமான,

லெப். கேணல் ராதா (கனகசபாபதி ஹரிச்சந்திரா - வண்ணார்பண்ணை மேற்கு - யாழ்)

அச்சுவேலி வலலாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

லெப், கோமேஸ் (இரத்தினம் தவராசா- நாவற்காடு, அச்சுவேலி தெற்கு - யாழ்)

1988 ம் ஆண்டு மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

பைரவன் (இளையதம்பி கதிரவன் - வந்தாறுமூலை - மட்டு)

யாழ் - வல்வெட்டித்துறை, மானாங்கனை, ஊறணிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட நேரடிச்சமரில் விழுப்புண்ணடைந்த நிலையில் சயனைட் உடகொண்டு வீரச்சாவெய்திய,

கப்டன் ரமேஸ் மாஸ்ரர் (பொன்னையா சிவஞானசுந்தரம் - பொலிகண்டி - யாழ்)

இதே சம்பவத்தில் வீரச்சாவெய்திய,

2 ம் லெப். ஜீவா (தம்பிராசா சத்தியமூர்த்தி - பொலிகண்டி, வல்வெட்டித்துறை - யாழ்)

ஜெயம் (துரைசிங்கம் சிறீதரன் - மானாங்கனை, வல்வெட்டித்துறை - யாழ்)

இதே சம்பவத்தின்போது இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்,

1989 ம் ஆண்டு மன்னார் - முள்ளிக்குளம் பகுதியில் தேசவிரோதசக்திகளின் முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

கப்டன் அமலன் (அலோசியஸ் அமலதாஸ் - அடம்பன் - மன்னார்)

கப்டன் குலம் (பொன்னுத்துரை யோகராசா (ரவி) - பூநகரி மன்னார்)

கப்டன் புதுமை (பொன்னுச்சாமி வரதகுமார் - அடம்பன் - மன்னார்)

கப்டன் சபேசன் (சீமோன் இமானுவேல் இராசரட்ணம் - முருங்கன் - மன்னார்)

லெப் நாயுடு (கஸ்பார் ஜெயசீலன் - பள்ளமடம் - மன்னார்)

லெப்,மாக்ஸ் (பத்மநாபன் சசிக்குமார் - மடுக்கோவில் - மன்னார்)

லெப் கர்ணன் (கிட்ணர் சிவகுமார் - நல்லூர், பூநகரி - கிளி)

2-ம் லெப் சிவம் (ஆபிரகாம் முருகையா - கள்ளிமோட்டை - மன்னார்)

வீமன் (பிலிப் றோச நிரஞ்சன் - சாவற்காடு - மன்னார்)

பீற்றர் (செபஸ்தியாம்பிள்ளை சகாயராசா - கருங்கண்டல், வண்ணாங்குளம் - மன்னார்)

லெப் சுரேஸ் (சண்முகம் சத்தியசுரேஸ் - கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு - யாழ்)

யாழ் - சுழிபுரமலையில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

செந்தில் (முருகேசு டொமினிக் - 4-ம் வட்டாரம், புங்குடுதீவு - யாழ்)

இதே பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

திருமலை - நிலாவெளிப்பகுதியில் கோவில் திருவிழாவில் கலந்துகொண்ட மக்கள் மீது தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 17 தமிழர்கள்

1991 -ம் ஆண்டு மட்டு - படுவான்கரை, திருப்பழுகாமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அவ்விடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1992 -ம் ஆண்டு மட்டு - வாழைச்சேனை, கிண்ணியடியில் இனந்தெரியாதோரால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட தந்தை உட்பட 05 குழந்தைகள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

❋ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

### தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-9458)

# மனிதனும் வரலாறும்

## 4

இயங்கியல் ஆய்வு முறைமைக்கு இலக்கணமாக திகழும் கார்ல் மார்க்ஸின் 'மூலதனம்', முதலாளிய பொருள் உற்பத்தி உலகை ஆழமாக விசாரணை செய்கிறது. 'தற்கால சமூகத்தின் பொருண்மிய இயங்கு விதிகளை பிட்டுக் காட்டுவதே இந்த ஆய்வு நாலின் இறுதிநோக்கம்' என 'மூலதனத்தின்' முன்னுரையில் அவர் குறிப்பிடுகிறார்.

சமூகக் கட்டமைப்பின் அடித்தளமாகப் பொருண்மிய அமைப்பு அமைந்திருக்கிறது. பொருண்மிய அமைப்பின் இயங்கு விதிகளே சமூகக் கட்டமைப்பின் அசைவியக்கத்திற்கு பிரதான காரணிகளாக விளங்குகின்றன. ஆகவே, பொருண்மிய அமைப்பின் இயங்கு விதிகளைக் கண்டுகொண்டால் சமூக இயக்கத்தின் போக்கினை, அதன் வரலாற்று நகர்வினைக் கண்டு கொள்ளலாம். இந்த நோக்கிலேயே முதலாளிய சமூகத்தின் உற்பத்தி வடிவத்தை 'மூலதனம்' அறுவை செய்து பார்க்கிறது.

இந்த ஆய்வில், முதலாளிய உற்பத்திமுறையில் நிலவு முரணியங்களை மிகவும் நுட்பமான முறையில் வெளிப்படுத்திக் காட்டுகிறார் கார்ல் மார்க்ஸ். இந்த முரணியங்கள் முதலாளியத்தை பெரும் நெருக்கடிக்குள் தள்ளிக் கொண்டிருப்பதாக அவர் சுட்டிக் காட்டினார். இது முதலாளியத்தின் சிதைவுக்கு வழிகோலும் என அவர் நம்பினார்.

உற்பத்தியை பெருக்க வேண்டும் என்ற பேரவாவில், முதலாளியமானது தொழில்நுட்பத்தை விருத்தி செய்து, கட்டுக்கடங்காத வளர்ச்சிப் பாதையில் செல்கிறது. இதன் விளைவுகளில் ஒன்றாக, இலாப விகிதாச்சாரத்தில் தவிர்க்க முடியாத வீழ்ச்சி ஏற்படும். இது முதலாளியத்தின் உள் முரண்பாடாக எழுந்து, முதலாளிய உற்த்தி முறையை ஸ்தம்பிக்கச் செய்யும். மறுபுறத்தில், முதலாளியத்தின் பெருவளர்ச்சி, முதலாளிய தொழிலாள வர்க்கங்களை இருதுருவமான பிளவில் இட்டுச் செல்லும். பெருமீன்கள் சிறுமீன்களை விழுங்குவதுபோல, பெருமுதலாளிகள் சிறுமுதலாளிகளை ஏப்பம்விட முதலாளிகளின் தொகை சுருங்கும். அதேவேளை, தொழிலாள வர்க்கத்தின் தொகை பெருகும். சுரண்டல் அதிகரிக்கும். தொடர்ச்சியாக வறுமையின் விளிம்பிற்கு பாட்டாளி வர்க்கம் தள்ளப்படும். சகித்துக் கொள்ள முடியாத துன்பத்தில் உழைக்கும் வர்க்கம் உழலும். இதனால் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெடிக்கும். இவ்விதம் உள்-முரண்பாடாக எழும் நெருக்கடியால் முதலாளியமானது தனது புதைகுழியைத் தானாகவே தோண்டிக் கொள்ளும். அதன் டதைகுழியிலிருந்து ஒரு புதிய சமூகம் பிறக்கும். புதிய உற்பத்தி உறவுகளைக் கொண்ட ஒரு புதிய உற்பத்தி வடிவம் தோன்றும். இவ்வாறு 'மூலதனத்தில்' தீர்க்கதரிசனம் சொல்கிறார் கார்ல் மார்க்ஸ்.

கார்ல் மார்க்சின் தீர்க்கதரிசனம் பலிக்கவில்லை. முதலாளித்துவம் வளர்ச்சி கண்ட நாடுகளான பிரிட்டன் அல்லது ஜேர்மனியில் ஒரு சமூகப் புரட்சி வெடிக்கலாம் என கார்ல்மார்க்ஸ் எதிர்பார்த்தார் அவர்எதிர்பார்த்ததுபோலஇந் நாடுகளில் புரட்சி நிகழவில்லை. புரட்சிகள் வேறு எங்கோ நிகழ்ந்தன. அதுவும் முதலாளித்துவம் முதிர்ச்சி காணாத, நிலமானியத்தில் திளைத்துநின்ற ரஷ்யாவிலும் சீனாவிலும் புரட்சிகள் நிசழ்ந்தன. இந்தப் புரட்சிகளும் இயங்கியலின் தவிர்க்கமுடியாத நியதிகளின் நிர்ப்பந்தத்தால் நிகழவில்லை. இங்கு புரட்சிகள் திட்டமிட்டு நடத்தப்பட்டன. மனித செயற்பாட்டின் திண்ணியமான முனைப்பாக சமூக மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டன.

லெனினும் மாவோவும் இயங்கியல் ஆய்வு முறைமையைக் கையாண்டனர். முரணியக் கோட்பாட்டின் அடிப்படையில் சமூக மெய்யுல்கை ஆழமாக ஆராய்ந்தனர். ஆயினும் கோட்பாட்டு விளக்கத்துடன் நின்றுவிடாது செயற்பாட்டிற்கு முதன்மை கொடுத்தனர். கோட்பாட்டுடன் செயற்பாடு கைகோர்த்து நிற்கும் பொழுதுதான் புரட்சி சாத்தியமாகும் என்பதை வலியுறுத்தினர். இந்தக் கோட்பாடும், செயற்பாட்டு அனுபவத்தில் நெறிக்கப்பட வேண்டும் என்பதை லெனின் சுட்டிக்காட்டினார். 'வெகுசனப் புரட்சி இயக்கத்தின் நடைமுறைச் செயற்பாட்டுடன் ஒன்றித்து நிற்கும்பொழுதே ஒரு புரட்சிகர கோட்பாடு முழுமையான வடிவத்தை எடுக்கிறது' என்கிறார் லெனின். மனித செயற்பாடுதான் மனித உலகில் மாற்றத்தை நிகழ்த்த வல்ல சக்தி என்பதை கர்ல் மார்க்ஸ் உணர்ந்திருக்கத் தவறவில்லை. உலகம் பற்றி விசாரணைகள் செய்வதில் அர்த்தமில்லை; உலகம் மாற்றியமைக்கப்பட வேண்டும், என்பதை வலியுறுத்தியவர். அவரது அரசியல்எழுத்துக்கள் பாட்டாளி வர்க்கப் புரட்சியை வலியுறுத்தி நிற்கின்றன. அப்படியிருந்தும், மூலதனத்தில்முதலாளியத்தின் தன்னியல்பான தவிர்க்க முடியாத சிதைவுபற்றி அவர் ஆருடம் கூறியிருக்கிறார்.

'மூலதனத்தில்' முதலாளியத்தின் சாவுபற்றி கார்ல் மார்க்ஸ் தெரிவித்த தீர்க்கதரிசனக் கூற்றுக்கள் சமூக சிந்தனையாளர் மத்தியில் பெரும் சர்ச்சையை எழுப்பியது.

மார்க்ஸ் எதிர்வுகூறியதுபோலமுதலாளித்துவம் செத்துவிடவில்லை. பதிலாக, அது பெருவளர்ச்சி கண்டுவருகிறது. ஏகபோக முதலாளியமாக, அரச முதலாளியமாக, ஆக்கநல முதலாளியமாக, காலத்திற்குக் காலம், அது வெவ்வேறு வடிவங்களை எடுத்து விஸ்பரூபம்பெற்று வருகிறது. அது தேசிய எல்லைகளைக் கடந்து உலகக் கூட்டணி அமைத்து, சர்வதேச சக்தியாக பேயுருவெடுத்து, பூமியின் இரத்தத்தைக் குடித்து வருகிறது. அதன் பூதாகர வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க முடியாமல் கம்யூனிச உலகமும் உடைந்து போய்விட்டது. இன்று, உலக முதலாளியத்தின் சிலந்தி வலைக்குள் முழு உலகமுமே சிக்குப்பட்டு நிற்கிறது.

இந்தநிலையில், முதலாளியத்திற்கு சாவு மணி அடித்து, கார்ல் மார்க்ஸ் விடுத்த மரண அறிவிப்பு, சர்ச்சைக்கு இலக்காகியதில் வியப்பொன்றுமில்லை.

'மூலதனத்தின்' ஆய்வில், முதலாளியத்தின் உண்மை முகம் கண்டுகொள்ளப்படவில்லை; உலகத்தின் வளங்களையும், உழைப்பாற்றலையும் சுரண்டிக் கொழுக்கும் அதன் உற்பத்தி வலு செம்மையாக எடைபோடப்படவில்லை. என்பது சிலரது குற்றச்சாட்டு.

தொழில்நுட்பத்தின் தன்மையை, அதன் பேராற்றலை கார்ல் மார்க்ஸ் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பது இன்னொரு சாராரது வாதம். உற்பத்தி சக்தியின் முக்கிய கூறாக விளங்கும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியானது உற்பத்தி உறவுகளில் முரண்பாட்டையும், நெருக்கடியையும் தோற்றுவிக்கும் எனக் கருதுவது தவறு. தொழில்நுட்பமானது மனிததேவையின் நிர்ப்பந்தத்தால் பிறக்கிறது. பொருள் உற்பத்தியை செழுமைப்படுத்துகிறது. அதன் நுண்ணறிவைப்பெற்று தொழிலாள வர்க்கம் வளர்கிறது. இந்த தொழிற்திறமையை முதலாளித்துவம்

**▪ பிரம்மஞானி ▪**

ஊக்குவிக்கிறது. முழு உலகத்தையுமே, ஒரு புதிய தொழில்நுட்ப யுகத்தை நோக்கி முதலாளித்துவம் நகர்த்திச் செல்கிறது. முதலாளிய உற்பத்தியின் மூச்சாக விளங்கும் இந்தத் தொழில்நுட்பத்தின் வீச்சை கார்ல் மார்க்ஸ் சரியாக மதிப்பாய்வு செய்யவில்லை என்பது இவர்களது நிலைப்பாடு.

'மூலதனத்தில்' கார்ல் மார்க்சின் தீர்க்கதரிசனம் பலிக்காது போனதற்கு மேற்குலகப் பாட்டாளி வர்க்கத்தின் பிற்போக்கான உலகப் பார்வைதான் காரணம் என்பது சிலரது கருத்து. முதலாளியம் தனது வரலாற்றுப் போக்கில் நெருக்கடிகளை சந்திக்கத்தான் செய்தது; அப்பொழுதெல்லாம் புரட்சிக்கான புறநிலை எழுந்தது; ஆனால் பாட்டாளி வர்க்கம் புரட்சிகரப் பிரக்ஞையைப் பெற்றுக் கொள்ளவில்லை; தொழிலாள சக்தியை புரட்சிப் பாதையில் வழி நடத்திச் செல்லும் தகைமையும் ஆற்றலும் மேற்குலக இடதுசாரித் தலைமைக்கு இருக்கவில்லை, என்பது இவர்களது வாதம். இன்று மேற்குலகப் பாட்டாளி வர்க்கம் செல்வத்தில் திளைக்கிறது; முதலாளிய அபிலாசைகளுடன் வசதிகளைப் பெற்று வாழவிரும்புகிறது; இதனால் புரட்சிகர சோசலிசப் போராட்டத்தில் நம்பிக்கையிழந்து நிற்கிறது, என்ற கருத்தையும் இவர்கள் முன்வைக்கிறார்கள்.

கார்ல் மார்க்ஸ், இயங்கியலை ஒரு சமூக ஆய்வுக்கருவியாக மட்டும் கையாளவில்லை: இயங்கியல் விதிகளின் தவிர்க்கமுடியாத நியதியின் அடிப்படையிலேயே சமூக இயக்கமும், சமூக மாற்றமும் நிகழ்வதாக அவர் நம்பினார்; இந்த நம்பிக்கையின் வெளிப்பாடாகவே முதலாளியத்தின் தவிர்க்கமுடியாத சிதைவுபற்றி அவர் ஆருடம் கூறத் துணிந்தார். இப்படியும் அவருக்கு எதிராக ஒரு விமர்சனம் முன்வைக்கப்படுகிறது.

இவ்விதம் மூலதனத்தில் கார்ல் மார்க்ஸ் மேற்கொண்ட ஆய்வும், அவரது சில முடிவுகளும் பெரும் சர்ச்சையை எழுப்பியது. இந்த வாதப் பிரதிவாதங்களின் சாதக பாதக அம்சங்கள் பற்றி விளக்குவது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. கார்ல் மார்க்சின் வரலாற்றுப் பொருளியத்தை ஒரு சமூக வரலாற்று விஞ்ஞானமாகக் கொள்ளமுடியுமா? என்ற பிரச்சினையை மட்டும் இங்கு பார்ப்போம்.

மார்க்சின் வரலாற்றுப் பொருளியம் ஒரு தத்துவதரிசனம் அல்ல; அது ஒரு சமூக வரலாற்று விஞ்ஞானம் என வாதாடுகிறார் அல்தூசர். நவமார்க்சிய சிந்தனைப் பாரம்பரியத்தில் அல்தூசரின் தத்துவார்த்த எழுத்துக்கள் மிகவும் பிரபல்யம் பெற்றவை. மேற்குலக சோசலிச சிந்தனையில் பெரும் சிலுசிலுப்பை ஏற்படுத்திய அவரது கருத்துக்களை மிகவும் சுருக்கமாக இங்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வோம்.

வரலாற்றுப் பொருளியத்தை ஒரு சமூக விஞ்ஞானக் கோட்பாடாக நிறுவும் நோக்கில், கார்ல் மார்க்ஸ் படைத்த அரசியல், தத்துவார்த்த எழுத்துக்கள் அனைத்தையும் சித்தார்ந்த வாதம் என ஒதுக்கிவிடுகிறார் அல்தூசர். அது மட்டுமன்றி, மார்க்சிய மரபுவழி தோன்றிய தத்துவச் சிந்தனையாளர்கள் பலரது எழுத்துக்களையும் அறிவியலுக்குப் புறம்பான கருத்தியல் என அவரால் நிராகரிக்கப்படுகிறது. 'மூலதனத்தை' மட்டுமே முக்கிய ஆய்வுநூலாக அவர் மதிப்பாய்வு செய்கிறார். 'மூலதனத்தில்' மார்க்ஸ் அறிமுகம் செய்யும் முக்கிய கருத்தாக்கங்களை (உதாரணமாக, உற்பத்தி வடிவம், உற்பத்தி சக்திகள், உற்பத்தி உறவுகள் போன்றன) மையமாக வைத்து வரலாற்றுப் பொருளியத்தை ஒரு விஞ்ஞானக் கோட்பாடாக நிறுவ முனைகிறார் அவர். அல்தூசரின் ஆய்வில், மார்க்சியம் ஒரு சமூக அமைப்பியல் கோட்பாடாகக் கொள்ளப்படுகிறது. விஞ்ஞானம் என்பதும் அறிவை உற்பத்தி செய்யும் ஒரு கோட்பாட்டுக் கட்டமைப்பாக விளக்கப்படுகிறது. 'மூலதனத்து' கருத்தாக்கங்களின் அடிப்படையில், மனித சமூகத்திற்கும், சமூக இயக்கத்திற்கும் அவர் கொடுக்கும் விளக்கத்தை இனிப்பார்ப்போம்.

சமூகம் என்பது முழுமையைக் கொண்ட ஒரு வடிவமைப்பு (Structural Totality). பல அமைப்புகளின் கூட்டமைப்பாக அது இயங்குகிறது. இந்த சமூக அமைப்புகள் ஒன்றோடு ஒன்று உறவு கொண்டு, ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து ஒரு சிக்கலான ஒருமைப்பாட்டில் செயற்படுகின்றன. இந்த சமூகக் கட்டமைப்பின் பிரதானமான அலகுகளாக பொருண்மியம், அரசியல், கருத்தியல் ஆகியன இயங்குகின்றன. இந்த மூன்று முக்கிய அமைப்புகளின் ஒன்றியமாக சமூக வடிவமைப்பு அமையப்பெறுகிறது. சமூகத்தின் அமைப்புகள் ஒவ்வொன்றும், தனக்கே உரித்தான செயற்பாட்டைக் கொண்டவை. பொருளுற்பத்திச் செயற்பாடு, அரசியற் செயற்பாடு, கருத்து உற்பத்திச் செயற்பாடு, இப்படியாக. இந்த அமைப்புகள் ஒவ்வொன்றும் சார்பு நிலையுடைய தனித்துவம் கொண்டவை (Relatively Autonomous). தன்னியல்பாக இயங்கியபோதும் ஒன்றோடு ஒன்று சார்ந்து நிற்பவை. இந்த அமைப்புகளின் செயற்பாடுகள், ஒன்றின்மீது ஒன்று தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஒன்றின் தாக்கமும் அழுத்தமும் மற்றதைப் பாதிக்கிறது. இந்த சமூக அமைப்புகளின் செயற்பாடுகளும் உறவுகளும், ஒன்றின்மீது ஒன்று விழுத்தும் தாக்கங்களும் அழுத்தங்களும் சமூக இயங்கு நிலைக்கும் அசைவியக்கத்திற்கும் காரணியாக இருக்கின்றன. இறுதியில், பொருண்மிய அமைப்பே சமூகக் கட்டமைப்பில் மாற்றத்தை நிகழ்த்த வல்ல நிர்ணய சக்தியாக அமைகிறது. அல்தூசரின் சமூக அமைப்பியல் இறுதியில் பொருண்மிய அமைப்பிற்கே முதன்மை கொடுக்கிறது.

சமூக வரலாற்று விஞ்ஞானமாக, அல்தூசர் சித்தரித்துக் காட்டும் மார்க்சிய அமைப்பியலில் முரணிய விதி முக்கிய இடத்தைப் பெறுகிறது. முரணிய விதியே சமூக அசைவியக்கத்தின் இயக்கு விதியாக அமைகிறது. சமூகத்தின் பல்வேறு கூறுகளிலும், பல்வேறு நிலைகளில், பன்முகப்பட்டதாக முரணியம் செயற்படுகிறது. பன்முகப்பட்ட சமூக முரண்பாடுகளின் ஒட்டு மொத்த விளைவாக சமூக மாற்றம் நிகழ்கிறது.

அல்தூசர் கற்பிக்கும் மார்க்சிய சமூக விஞ்ஞானம், வரலாற்று இயக்கத்தை ஒரு இயந்திர இயக்கமாக விளக்க முனைகிறது. அமைப்புகளும், அமைப்புகளின் உறவுகளும், அமைப்புகளின் பரஸ்பர அழுத்தங்களும், அந்த அமைப்புகளிலிருந்து தலைதூக்கும் முரண்பாடுகளும், அந்த முரண்பாடுகளின் கூட்டிணைந்த விளைவுகளும், என்ற ரீதியில் சமூக வரலாறு ஒரு இயந்திரக் கட்டமைப்பின் சக்கரமாகச் சுழல்கிறது. இதில், மனித செயலாண்மைக்கு இடமளிக்கப்படவில்லை. மனித உறவுகளுக்கும் மனித செயற்பாடுகளுக்கும் அப்பால் சமூக அமைப்புகளின் நிர்ணய சக்தி மேலாண்மை செலுத்துகிறது.

அமைப்புகளால் கட்டப்பட்ட அல்தூசரின் சமூக உலகில் மனிதர்களின் பங்கு சிறுமைப்படுத்தப்படுகிறது. மனிதர்கள் சமூக அமைப்புகளின் சுமைதாங்கிகளாக (Bearers of Structures) சித்தரிக்கப்படுகிறார்கள் சமூக அமைப்புகளால் வனையப்பட்ட பொம்மைகளாக உருவாக்கப்படுகிறார்கள். இந்த அமைப்பியல் விஞ்ஞானத்தின்படி மனித வரலாற்றை மனிதர்கள் படைப்பதில்லை. அமைப்புகளின் முரணிய இயக்கமே மனிதர்களையும் இயக்கி, மனித வரலாற்றையும் நகர்த்திச் செல்கிறது. ஒட்டுமொத்தத்தில் அல்தூசரின் வியாக்கியா

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மண்ணுக்காக....

## வீடியோ திரைப்படம் ஒரு நோக்கு

இளையவன்

தமிழீழ விடுதலைப் போராட்டம் பிறப்பித்துள்ள சூழலில் சமகாலச் சம்பவங்களின் பதிவாகவும், உணர்ச்சி வெளிப்பாட்டு சித்திரங்களாகவும், போராட்டத்தின் நியாயத்தை எடுத்துரைத்து போராட்ட உணர்வைத் தூண்டுபவையாகவும் பல்வேறு கலைப் படைப்புகளும் பல புதிய கலை வடிவங்களும் தோற்றம் பெற்றிருப்பது எவரும் மகிழ்ச்சி அடையாமல் இருக்க முடியாது. உணர்ச்சிகளைத் தூண்டும் பாடல்களைக் கொண்ட ஒலி நாடாக்கள் முதல் எண்ணம் எல்லாம் நிறையும் வகையில் உருவாக்கப்படும் ஒளி நாடாக்கள் வரை பலவற்றை இந்த வகையில் குறிப்பிட்டுக் கூற முடியும் மின்சாரம் எரிபொருள் முதல் அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்துக்கும் சிறிலங்கா அரசு தடைவிதித்துள்ள இக்காலச் சூழலிலும் கூட தமிழ் மக்கள் நிமிர்ந்து தான் நிற்கின்றனர் என்பதையும், நவீன தொடர்பு சாதனங்களைக் கையாண்டு எமது போராட்டத்தின் நியாயத்தை உலகின் மூலை முடுக்குகளுக்கு எல்லாம் எடுத்துரைத்து விட முடியும் என்பதையும், இத்தகைய கலைப் படைப்புக்கள் காட்டி நிற்கின்றன.

இந்த வகையில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும், நிதர்சனமும் இணைந்து தயாரித்து அண்மையில் வெளியிட்டுள்ள மண்ணுக்காக வீடியோப் படம் குறிப்பிடப் படக் கூடியதாகும். வண்ணத் தமிழ் ஈழம் மலரும், எண்ணம் எல்லாம் நிறையும் என்ற நம்பிக்கையை ஊட்டும் இத்திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் ஊட்டக் கூடிய உணர்ச்சிகள் முக்கியமானவையாகும்.

கோட்டை முனியப்பர் கோவில் முதல் பாலர் பாடசாலையில் பிள்ளைகள் கல்வி கற்கும் காட்சி ஈறாக காணும் ஒவ்வொரு காட்சியும் கடந்த காலத்தையே நினைவூட்ட ராஜன் படும் அவஸ்த்தை இருக்கிறதே அது இன்றும் இம்மண்ணில் வாழும் எவருக்கும் பொருந்தக்கூடியதாகும்சாதாரணமாக குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்கள் கூட எந்தவிதமான நியாயமும் இல்லாமல் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக அரசினால் தண்டனைக்குஉள்ளாக்கப்படுவதும், ஈடுசெய்ய முடியாத இழப்புகளைச் சுமக்க நிர்ப்பந்திக்கப் படுவதும் இன்றைய யதார்த்தம் அதற்கு ராஜன் ஒருவகை மாதிரி.

பொங்கல் தினத்தன்று தாய், தந்தை மனைவிமக்களுடன் குதூகலமாக பொங்கி மகிழும் வேளையில் விமான குண்டு வீச்சில் மனைவியையும் ஒரு மகளையும் இழந்துவிடும் ராஜன் அன்று முதல் தீராத சோகத்துக்கு ஆளாகின்றான். கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே சிறு அளவிலான வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் ராஜன் தனது தொழிலைக்கூட செய்ய முடியாதநிலைமைக்கு உள்ளாகின்றான் இந்த நிலையில் படையினர் சித்திரவதை முகாம்களைக் காட்டி அச்சுறுத்தியும் - ஆசை வார்த்தைகளைக் கூறி மயக்கியும் தமக்கு ஆதரவாகச் செயற்பட ராஜனைத் தூண்டுகின்றனர். படையினரின் வார்த்தைகளுக்கு எடுபட்டுப் போகாத அதேவேளை படையினரின் நம்பிக்கைக்கு உரியவனாகிய போதும் தனது தாயக மண்ணுக்காக எப்படிச் செயற்பட்டான் என்பதே படத்தின் மூலக்கதை.

வல்வையூரான் எழுதியமூலக் கதை, பொன். கணேச மூர்த்தியின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்டுள்ள இப்படத்தின் பெரும்பாலான காட்சிகள் மெதுவாக நகர்கின்ற போதும்ஆணித்தரமான மனப் பதிவை ஏற்படுத்தக் கூடியவையாகும்.

### குறியீடுகள்

காட்சிகளின் மூலம் செய்தியை எடுத்துரைப்பது என்பது சினிமாவின் மொழி எனப்படும். அதாவது ஓடிக்கொண்டிருக்கும்கடிகாரத்தின் பெரிய முள்ளின் நிலையையும், சின்ன முள்ளின் நிலையையும் தான் கண்கள் அவதானிக்கின்றன. என்றாலும் ஒரு கணப்பொழுதிலும் குறைவான பொழுதில் நேரத்தை சிந்தனை கணக்கிட்டுக்கொள்கின்றதே. அது போலத்தான் காட்சிகளின் ஊடாக செய்திகளைச் சொல்லுவது இங்கும் முக்கியத்துவம் பெற்றிருப்பதால் உரையாடல்கள்மிகவும் குறைவாக இடம் பெற்ற போதும் செய்தி தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது இதற்கு உதாரணமாக மண்ணுக்காக வீடியோப் படத்தின் மூன்று இடங்களைச் சுட்டிக்காட்ட முடியும் என நம்புகிறேன்.

முதலாவதாக 'வண்ணத் தமிழ் ஈழம் மலரும் எண்ணம் எல்லாம் நிறையும்' என்பது பின்னணியில் ஒலித்துக்கொண்டிருக்க ஒரு ஒளிப் பொட்டாக சூரியன் உதயமாகும் காட்சியைக் குறிப்பிடலாம். தினமும் சூரியன் உதயமாகும் என்பது எத்தனை நிஜமானதோ அத்தனை நிஜமானது தமிழீழத்தின் விடுதலை என்பதை இக் காட்சி எடுத்துரைக்கின்றது எனலாம்.

இரண்டாவதாக 'மண்ணுக்காக' வீடியோ படத்தின் நாயகன் என்ற பாத்திரத்தை ஏற்றிருக்கும் ராஜனின் மனமாற்றத்தைக் குறிப்பிடும் கட்டத்தில் சிகரட் லைட்டரில் இருந்து ஒருபொறி தனியாகக் காட்டப்படுவதைக் குறிப்பிடலாம்.

மூன்றாவதாக குளிர் சாதனப் பெட்டியிலிருந்து உடுப்புகள் எடுககும் காட்சியை குறிப்பிடலாம் சீப்பை ஒளித்து வைத்தால் கல்யாணமே நின்று விடும் என்று கருதுகின்ற மனப்பாங்கில் அரசாங்கம் மின்சாரத்தை தடைசெய்த சூழல் பெறுமதி வாய்ந்த குளிர் சாதனப் பெட்டிகளை அர்த்தம் இழந்த ஆடம்பரங்களாக்கி விட்டுள்ளது. அது வெறும் இரும்பு அலுமாரிகளாய்ப் போய்விட்டது. சில வேளைகளில் குளிர்சாதனப் பெட்டிகள் உடுப்பு வைக்கும் அலுமாரிகளாகப் பயன்படுவது அபத்தம் போலத் தோன்றக் கூடும். ஆனால் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் மின்சார சக்தியை எமது தேசம் இழந்திருப்பதை எடுத்துக் காட்டும் ஒரு சிறந்த காட்சியாக இதனைக் கருதலாம்.

எனினும் சில காட்சிகள் அதிக நேரத்தை எடுத்து நீண்டு செல்வது படத்தின் விறுவிறுப்பைப் பாதிக்கும் முக்கிய விடயமாக இருக்கின்றது. அத்துடன் பொதுவாக நன்கு அறிமுகமான இடங்களில் படம் பிடிக்கப் பட்டிருப்பதும் காட்சிகளில் உணர்த்தப்படும் செய்திகளை இரசிப்பதற்கு ஒருந்தகம் விளைவிக்கின்றது எனலாம்.

இன்றைய நெருக்கடி மிகுந்த சூழலிலும் கூட எத்தனையோ இடர்ப்பாடுகளையும் கடந்தும் நம்பிக்கையுடன் இந்தத் தேசம் எழுந்து நிற்கின்றது என்பதை உணர்த்துவதில் மண்ணுக்காக வீடியோப்படம் வெற்றி பெற்றுள்ளது. தமிழீழப் போராட்டம் பல்வேறு கலைவடிவங்களையும் பல புதிய செய்திகளையும் உலகிற்கு வழங்கும் என்பதற்கு மண்ணுக்காக கட்டியம் கூறுகின்றது.

---

# சேர் ஜோன் கொத்தலாவலை - டி.பி. விஜேதுங்கா ஓர் ஒப்பீடு

சிவகுரு - யோகராசா

1952-ம் ஆண்டு மார்ச் மாதம் சிறிலங்காவின் முதற் பிரதமராகிய டி. எஸ். சேனநாயக்கவின் திடீர் மறைவின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக பதவிக்கு வந்த சேர் ஜோன் கொத்தலாவலை போல 1993-ம் ஆண்டு மே மாதம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் திடீர் மறைவினால் பதவிக்கு வந்தவர் டி. பி. விஜேதுங்காவாகும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கான ஒரு சாபக் கேடு என்று வர்ணிக்கப்பக் கூடியவர்களே சேர் ஜோன் கொத்தலாவலையும், டி. பி. விஜேதுங்காவுமாகும். இவ்விருவரும் இலங்கை வாக்காளரின் ஆதரவைப் பெற்றவர்களல்ல. சேர் ஜோன் கொத்தலாவலை பௌத்தமக்களின் எதிர்பார்ப்புகளையே சரியான படி புரிந்து கொள்ளாதவர் நகர்ப்புற உயர் குழாத்தினரின் (Elitis) ஆதரவுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்த சேர் ஜோன் கொத்தலாவலை எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவின் பக்கத்திலிருந்து வந்த எதிர்ப்பையும் முறையானபடி உணர்ந்து செயற்படத்தவறியிருந்தார். அத்துடன் வார்த்தைகளை தாராளமாகக் கொட்டிவிட்டுப் பின்னர் அவமானப் படுபவராகவும் சேர் ஜோன் கொத்தலாவலை காணப்பட்டார்.

இத்தகைய ஒருவராகவே டி. பி. விஜேதுங்காவும் காணப்படுகின்றார். நீண்ட அரசியற் சிந்தனை இவரிடம்கிடையாது. அரசியல் வாதிகளால் பாவிக்கப்படுகின்ற இராஜதந்திரம் தந்திரோபாயம் என்பவற்றை இவர் அறியாதவராகவே உள்ளார். சிலவேளைகளில் டி. பி. விஜேதுங்காவை தோல்வியடையச் செய்வதற்காகவே அவரது ஆலோசகர்களால் திட்டமிட்டு தவறாக வழி நடத்தப்படுகின்றாரா என்று கூட எண்ணவேண்டியுள்ளது.

சேர் ஜோன் கொத்தலாவலை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்ற சந்தர்ப்பத்தில் பௌத்தமதம் பிரதானமானதொரு காலகட்டத்தில் இருந்ததுடன்இம்மதம் சார்ந்தவர்களின்எதிர்பார்ப்புகளும் அதிகமாக இருந்தன இந்த நேரத்தில் பௌத்தமதத்தில் சேர் ஜோன் கொத்தலாவலை தனது பார்வையை உரிய முறையில் செலுத்தவில்லை என்பதால் இவர் ஆதரவு குறைந்ததென்று கூறுமிடத்து மறுபுறம் டி.பி. விஜேதுங்கா பௌத்த மதத்திற்கும் சிங்களப் பேரினவாதச் சக்திகளுக்கும் கொடுக்கும் அளவுக்கு மீறிய ஊக்கம் எந்த வகையிலும் இவரின் ஆதரவைக் கூட்டும் என்று கூறிவிட முடியாது.

டி. பி. விஜேதுங்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆளும் அரசாங்கம் எதிர்க் கட்சிகளின் கூட்டு முன்னணியை எதிர்கொள்ளத் தயக்கம் காட்டுவது போல ஐக்கிய தேசியக்கட்சி 1956 ம் ஆண்டுத் தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணியை (MEP எதிர்கொள்ள முடியாமலிருந்தது. தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் உருவாகியுள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை தேர்தலில் எதிர் கொள்ளக்கூடிய வியூகத்தை டி. பி. விஜேதுங்கா சரியான முறையில் வகுக்கவில்லை.

1956-ம் ஆண்டுத் தேர்தல் சிறிலங்காவின் தேர்தல்களில் ஒரு முக்கிய திருப்பு முனை எனலாம். ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்டகால ஆட்சியில் சலிப்புற்றிருந்த வாக்காளர்கள் ஒரு மாற்றத்தைச் செய்ய விரும்பியமையின் விளைவாக சேர். ஜோன். கொத்தலாவலை தோல்வி காண எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பதவியேற்றார் சிறிலங்கா சுதந்திரமடைந்ததிலிருந்து1956ம் ஆண்டு வரையிலான காலப் பகுதியான ஏறக்குறைய ஒரு தசாப்தத்தை சிறிலங்கா வாக்காளர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை நீண்டதெனக் கருதினரெனில் 1977-ம் ஆண்டுமுதல் இன்று வரையான 17 வருடங்களை சிறிலங்கா வாக்காளர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் சலிப்புத் தரும் நீண்ட கால ஆட்சி எனக் கருதுவர் என்று வாதிடுவதில் என்ன தவறு உண்டு. ஆகவே1956-ம் ஆண்டில்வாக்காளரின்இச்சிந்தனை ஐக்கிய தேசியக் கட்சியை பதவியிலிருந்து அப்புறப்படுத்தியதென்றால் 1994-ம் ஆண்டுத் தேர்தலில் வாக்காளர்களின் இத்தகைய சிந்தனை டி. பி. விஜேதுங்காவையும், அவரது ஐக்கிய தேசியக் கட்சியையும் பதவியிலிருந்து நீக்காது என்பதற்கான மறுவாதம் தான் என்ன?

அன்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரம் கொத்தலாவலையின் ஆளுமை மீது நம்பிக்கையற்றிருந்தது போல இன்று டி. பி. விஜேதுங்காவின் ஆளுமையில் ஐக்கிய தேசியக் கட்சி வட்டம் சந்தேகப்படுகின்றது. ஐக்கியதேசியக் கட்சியிலுள்ளபலர் டி.பி. விஜேதுங்காவின்தலைமையை தமது 'தலைவிதி' என்று கருதிக் கவலைப்படுகின்றனர்.

புதிய அரசுகளின் கட்சி அரசியலில் பண்பாகவே மேற்கூறிய நிலைமையை நாம் கொள்ள வேண்டும். பாகிஸ்தானில் அரசியல்கொலையில் தந்தையைஇழந்த பெனாஸீர் பூட்டோ தற்போது பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது போல சிறிலங்காவில் அரசியற் கொலைகளால் விதவைகளாகவுள்ள தாயும், மகளுமாகிய திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்காவும் மக்களுக்குத் தெம்பூட்டும் கருத்துக்களை முன்வைப்பதால் அது ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தட்டிக் கழிக்க முடியாத ஆபத்தான எச்சரிக்கைகளாக தென்படுகின்றது. இது 1956-ம் ஆண்டு சேர். ஜோன் கொத்தலாவலையின் தவறான போக்குகளால் ஐக்கிய தேசியக்கட்சியை தோல்வியுறச் செய்தநிலைமைடி.பி. விஜேதுங்காவின் தவறானபோக்குகளால் ஐக்கிய தேசியக் கட்சியை தோல்வியுறச் செய்யுமென்று ஏன் கூறமுடியாது?

# வல்லரசுகள் விதைத்த வினைகளால் மீட்சியில்லா துயரில் ஆப்கான் மக்கள்

**பாலகுமாரன்**

இவ் வருடத் தொடக்கத்திலிருந்தே தொடங்கி பேரிடியாக ஆப்கானித்தான் மக்கட்கு அமைந்து விட்ட மோதல்கள் இன்றளவும் தொடர்கின்றன. இவை இப்போதைக்கு முடிவதற்கான எவ்விதமான சாத்தியமும் இல்லையென்பது இப்போது தெளிவாகி விட்டது. தொடக்கத்தில் காபூலை மையமாக வைத்து தொடங்கப்பட்ட மோதல்கள் இப்போது ஆப்கானின் பல்வேறு பகுதிகட்கும் பரவுகின்றன. மோதலைத் தவிர்க்க பாகித்தான் தொடக்கம் ஐ.நா வரை எடுத்த அமைதி முயற்சிகள் எதுவுமே பலனளிக்கவில்லை. இனிமேல் இத்தகைய முயற்சிகள் எதுவும் பயன் தரும் என்கிற நம்பிக்கைகளையும் மக்கள் இழந்து விட்டனர்.



குல்புதுதீன்கெக்மாட்டியார்

இரண்டிலொரு முடிவு வரும் வரை மோதல்கள் நீடிக்கப் போவதாகவே மக்கள் நம்புகின்றனர். பனிப்போர் நிலவிய காலத்தில் நடந்த மோதல்கள் போல் தொடர்ச்சியாக நீண்ட காலத்திற்கு ஆனால் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் இம் மோதல்கள் அமையப் போவதாக அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் ஆப்கானித்தான் என்கிற தேசத்தின் வரைபடத்தைமீளவும் வேறொரு விதமாக வரைய நேரிட்டு விடுமோ என்கிறஐயம் இப்போது வலுவடைகின்றது.

முடிவில்லாத அவலமே இன்று ஆப்கான் மக்கள் அன்றாட வாழ்வாகி விட்டது. மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பது போலிருந்த குழு மோதல்கள் மறையும் என மக்கள் நினைத்ததற்குப் பதிலாக அவை இப்போது பெரும் போராகி விட்டன. எனவே இரு வல்லரசுகளுக்கிடையே முறுகல் நிலை நிலவியபோது பேரழிவைச் சந்தித்த மக்கள் 1990ஆம் ஆண்டு சோவியத் படைகள் வெளியேறிய பின் முஜாகுதீன் போராளிகளின் குழு மோதல்களில் சீரழிந்த மக்கள் - இன்று முடிவில்லாத நீண்ட உள்நாட்டுப் போரில் மடிகின்றனர். இப்போது பட்டினிச் சாவும் அவர்களை அண்மிக்கின்றது. காபூலில் ஏறத்தாழ அரை இலட்சம் மக்கள் கடும் குளிரில் வதிவிட வசதிகளின்றி பட்டினியின் விளிம்பில் இருப்பதாக ஐ. நா. அறிவித்துள்ளது. நான்கு இலட்சம் மக்கட்கு மேல் இடம்பெயர்ந்து விட்டனர். காபூலின் பெரும் பகுதி பாழடைந்த நகரம் போல் சிதிலமாகி வெறிச்சோடிப் போய்விட்டது. சென்ற சனவரியிலிருந்து இற்றை வரை 1500 மக்கள் மடிந்ததாக, 10 000க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (காபூலில் மட்டும் 1992ஆம் ஆண்டின் பின் இற்றை வரை 10,000 மக்கள் குழு மோதல்களில் இறந்ததாக சொல்லப்படுகின்றது).

இப்போதுள்ள பெருத்த அவலம் என்னவென்றால் காபூல் நகரில் சிக்கியிருக்கும் மக்கட்கு உணவு விநியோகம் தடைப்பட்டமையும், ஏதிலிகளாக பாக்கித்தான், ஈரான் போன்ற நாடுகளை நோக்கி ஓடிய மக்களை அந்நாடுகள் ஏற்காமையும் ஆகும். ஒரு காலத்தில் தமது சகோதரர்களாக கருதி இரு கரம் நீட்டி வரவேற்று பல இலட்சம் ஆப்கான் மக்களை பல்லாண்டு காலம் பராமரித்த இரு நாடுகளும் இப்போது கையை விரித்து விட்டன. ஆப்கான் மக்கட்கு மிக நெருங்கிய ஆதரவாளராக தன்னை இனம் காட்டிய பாக்கித்தானின் புதிய போக்கு பெரும் சீற்றத்தை ஆப்கானித்தான் மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது. இதனாலேயே சென்ற பெப்புருவரி 20 ஆம் திகதி இசுலாமாபாத் நகருக்கு அண்மையில் பள்ளிப் பிள்ளைகள் சென்ற பேருந்தை கடத்திய ஆப்கான் போராளிகள் சிலர் காபூல் மக்கட்கு உணவு அளிக்குமாறு கோரிக்கை விடுத்தனர். பாக்கித்தானிய கொமாண்டோக்கள் முறியடித்த இக்கடத்தல் நாடகத்தின்போது சில ஆப்கானியர் மடிய நேரிட்டது. இதனால் காபூலில் இருந்த பாக். தூதர் அலுவலகம் தாக்கிச் சேதமாக்கப் பட்டது. ஏற்கெனவே தமது நாடுகளில் இருக்கும் 16 இலட்சம் ஏதிலிகளை பாக்கித்தானும், 23 இலட்சம் ஏதிலிகளை ஈரானும் எவ்வாறு திருப்பி அனுப்புவது என்றே சிந்திக்கின்றன. எனவே இன்று ஆப்கான் மக்கள் வல்லரசுகளினதும் அண்டை நாடுகளினதும் ஆபத்தான அரசியல் விளையாட்டில் பகடைக் காய்களாகி படாதபாடு படுகின்றனர்.

ஆப்கானின் அவலத்திற்கு அன்று தொட்டு இன்றுவரை அதன் அமைவிடமே பிரதான காரணமாகிவிட்டது. முன்பு வல்லரசுகள் தமது மேலாதிக்கத்திற்கு கருவியாக ஆப்கான் அமைவிடத்தைப் பயன்படுத்தினர். இன்றோ ஆப்கானைச் சுற்றியுள்ள மத்திய கிழக்கு நாடுகள், முன்னர் சோவியத்திலிருந்து பிரிந்து போன மத்திய ஆசியப் பகுதி குடியரசுகள் எல்லாமேஇன்று தமது பொருண்மிய நலன்கட்காக, ஆப்கானில் ஏற்படும் ஆட்சி தமது அரசுகட்கு பாதிப்பேற்படாமல் அமைவதற்காக தமது தலையை ஆப்கான் விவகாரத்தில் நீட்டுகின்றன, இதனால் இந்த நாடுகள் தத்தமது செல்வாக்கிற்கு உட்பட்ட அமைப்புக்களை ஆதரித்து தற்போதைய குழுமோதல்கள் தொடர்கதையாக வழி வகுத்த வண்ணமேயுள்ளன.

இவ்வாறாக உஸ்பெக்கித்தான், பாகித்தான், ஈரான், சவூதி அரேபியா, துருக்கி, தஜிகிஸ்தான் என நீளும் இந்நாடுகள் தமது நலன்கட்காக ஆப்கானில் உள்ள பல்வேறு பூர்வீகக் குழும, கலாசாரம் தொன்மை வேறுபாடுகளைக் கையாளுகின்றன. உஸ்பெக், தஜிக், பக்தூன், சியா, இஸ்மாயிலி, எனப் பல்வேறு இனக் குழுமங்களுக்கிடையேயான பரம்பரைப் பகைமைகளை இவர்கள் இன்று தீப்பற்றி எரியச் செய்து விட்டனர்.

குறிப்பாக 1990ஆம் ஆண்டிற்கு முன்னர் அமெரிக்க பாகித்தானிய கூட்டு முயற்சியால் திட்டமிட்டு வளர்க்கப்பட்டதும் போராளிக் குழுக்களில் மிகப் பலமுடையதுமான கிஸ்பி இசுலாமியின் (Hezbi - Islami) தலைவரான குல்புதுதீன் கெக்மாட்டியாருக்கும் தற்போதைய சனாதிபதியும் யமாதி இசுலாமி (Jamat-i - Islami யின் தலைவருமான றபானிக்கும், அவரது கூட்டாளியுமான அகமத் சா மசூத்திற்கும் இடையேயான பகைமை இன்று உச்சம் பெற்று விளங்குகின்றது. ஆப்கான் மக்களில் ஏறத்தாழ 30-50 விழுக்காடு பக்தூன் இன மக்களின் தலைவராக தன்னை கருதிக் கொள்பவர்கெக்மாட்டியார். அதுபோலவே சிறுபான்மை தஜிக் இனத்தைச் சேர்ந்தவர்கள் றபானியும், மசூத்தும் ஆவர். வரலாற்றில் 100 வருடங்களில் முதல் தடவையாக சடந்த இரு வருடங்களாககாபூலில், பக்தூன் இனத்தைச் சாராதவர்கள் ஆட்சி செய்வது கெக்மாட்டியாருக்குப் பொறுக்க முடியாத விடயமாகின்றது. சோவியத் சார்பு நஜிபுல்லா வீழ்ந்த பின்னர் பக்தூன் இனத்தை சாராத வடக்கு ஆப்கான் இனக் குழுக்கள் கைவசமே



ஜெனரல் தோஸ்த்தம்

காபூல் ஆட்சி இருந்து வருவதே இப்போதைய தகராறின் அடிப்படையாகின்றது. சோவியத்திற்கு எதிராகத் தாமே கட்டிவளர்த்த இவ் அமைப்புக்கள் தமக்குள் மோதுவதைத் தடுக்க அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் எடுத்த முயற்சி எதுவுமே பயன் அளிக்கவில்லை. அமெரிக்காவோ, ஆப்கான் விடயத்தை இப்போது தற்காலிகமாக கைகழுவி விட்டது. இறுதியில் பல்வேறு அழுத்தங்களை பிரயோகித்து சென்ற வருடம் பாக், ஈரான் சவூதி போன்ற நாடுகள் மெக்காவிற்கு போராளித் தலைவர்களை அழைத்து புனிதத் தலத்தின் முன் ஏற்படுத்திய இணக்கமும் இன்று காற்றில் பறக்கிறது. றபானியை சனாதிபதியாக கெக்மாட்டியாரைபிரதம மந்திரியாக- இதுவரை காலமும் மசூத் வகித்து வந்த பாதுகாப்புத் துறையை கெக்மாட்டியாரிடம் ஒப்படைக்கவும் வழி செய்யப்பட்டுள்ளது. ஆனால் மசூத்தோ நாடு திரும்பிய பின் பதவி விலக மறுத்ததுடன் கெக்மாட்டியாரை காபூலுக்கு வர விடாமற் தடுத்து தனது பதவி ஆசையை பகிரங்கமாகவேஇன்று வெளிப்படுத்தி விட்டார்.

கெக்மாட்டியாருக்கும் அகமத் சாமசூத்திற்கும் இடையிலான பகைமை உலகம் அறிந்தது. நானா, நீயா என்று இன்று இவர்கள் மோதும் மோதலின் தீவிரம் ஆப்கான் மக்களின் அவலத்திற்கு அடிப்படை.

இக்கட்டத்திலேயே வடக்கு ஆப்கான் பகுதி உஸ்பெக் இனத் தளபதியான ஜெனரல் தோஸ்த்தம் (Dostam) என்பவர் நிலைப்பாடு இம்மோதலில் முக்கியம் பெறுகின்றது. பெயரளவில் இவர் முசுலிமாக இருந்தாலும் சோவியத் சார்பு சனாதிபதி நஜிபுல்லா காலத்தில் அவருக்கு துணையாக இருந்தவர். பின் அவருக்கான தனது ஆதரவை விலக்கி முஜாகுதீன் போராளிகளோடு சேர்ந்ததன் மூலம் நஜிபுல்லாவின் வீழ்ச்சிக்குக் காரணமானார் அதன்பின் அகமத் சா மசூத்தோடு சேர்ந்து கெக்மாட்டியாரின் விரிவாக்கத்திற்கு பலத்த தடை ஆனார். இப்போது எவரும் எதிர்பாராத வகையில் றபானியைக் கைவிட்டு கெக்மாட்டியாரோடு சேர்ந்து விட்டார். இவரது மிகப் பலம் வாய்ந்த 80,000 உஸ்பெக் வீரர்களைக் கொண்ட படை சோவியத்தின் மிகப் பலம் வாய்ந்த கனரக ஆயுதங்களை கொண்டது. ஒரு தீர்மானிக்கும் சக்தியாக கருதப்படுவது. தனது மேலாண்மை வடக்குப் பகுதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டு காபூல் அரசில் தனக்கு முக்கிய இடம்அளிக்கப்பட வேண்டும் என்பதே இவரது கோரிக்கையாகும். இதற்காக இவர் எவரோடும் கூடடுச் சேரத் தயார். எனினும் இவரது பின்னணியில் பல்வேறு சக்திகள் செயற்படுகின்றன. பல சிக்கல்களின் முடிச்சுக்கள் அவிழ்க்கப்படுகின்றன.

புதிய மத்திய ஆசியக் குடியரசுகளான உஸ்பெக்கித்தானும், தஜிகித்தானும் தத்தமது அரசுகட்கு ஆபத்து வராமல் இருப்பதற்காக ஆப்கானில் இசுலாமிய அடிப்படைவாத அரசுகள் அமைவதை விரும்பவில்லை. எனவே வடக்கில் தோஸ்த்தம் பலம் பெற்று விளங்குவதை இவை ஆதரிக்கின்றன. அதுபோலவே துருக்கியும் ஜெனரல் தோஸ்த்தத்திற்குஉதவுவதாக கூறப்படுகின்றது. அது மட்டுமன்றி தஜிகித்தானில் இப்போது நடக்கும் உள்நாட்டுப் போரில் தஜிகித்தான் முன்னாள் சோவியத் சார்பு ஆட்சியாளருக்கு எதிராக கடுமையாக போராடி வரும் தஜிக் இன இசுலாமிய போராளிகளுக்கு ஆப்கானிலிருந்துஉதவி கிடைக்காமல் இருப்பதற்காக தஜிக் இன மசூத்திற்கும் எதிராகதோஸ்த்தத்திற்குதஜிகித்தானும் அங்கு தங்கியுள்ள யெல்ட்சினின் ருஷ்யப் படையினரும் உதவுவதாக வேறு கூறப்படுகின்றது.

> கொதிக்கும் எண்ணெயில் அன்று-
> கொழுந்து விட்டெரியும் தீயில் இன்று-
> ஆப்கான் மக்கள் படும் பாடு-

எனவே இவ்வாறான பின்னணியில் ஜெனரல் தோஸ்த்தம் தனது கட்டுப்பாட்டில் வடக்கின் சில பகுதிகளைச் செவ்வனே நிருவகித்து வருவதாகக் கூறப்படுகின்றது. காபூலைப் போல மோதல்களால் பாதிக்கப்படாத இவரது பகுதியின் தலைநகரான மசார் (Mozar) காபூலை விட செழிப்புள்ளதாக நம்பிக்கைக்குரிய பகுதியாகக் கருதப்படுகின்றது. இதனால் இங்கு அநேக வெளிநாடுகள் தமது தூதர் அலுவலகங்களை அமைத்துள்ளன. இவ்வாறே இன்று ஆப்கானின் உள்ளூர் பகுதிகள் அவ்வப் பகுதி இன குழுத் தலைவர்களால் நிருவகிக்கப்படுகின்றது. 1992ஆம் ஆண்டின் பின் மத்திய அரசு என்று ஒன்றிருப்பதாகவே எவரும் கருதுவதாகத் தெரியவில்லை.

இப்போது எழும் கேள்வி என்னவென்றால் இன்று காபூலை மையமாக வைத்து நடக்கும் மோதலில் தத்தம் வசதிக்காக கூட்டுச்சேர்ந்துள்ளோர் எவ்வளவு காலம் தமது கூட்டுக்களை வைத்திருப்பர் என்பதேயாகும். அவ்வாறு கூட்டுக்கள் முறியும் நிலையில் ஆப்கான் சிதறிப் போகும் நிலை இருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். முன்னர் மேற்குலக தொடர்பு சாதனங்களால் பெரும் வீரர்களாக சித்தரிக்கப்பட்ட மசூத் தனியான பெரு விருப்பமொன்றைஅடி



அகமதுசா மசூத்

மனதில் வைத்திருப்பதாகவே கருதப்படுகிறது. தற்போதைய தஜிகித்தான் குடியரசையும், ஆப்கானில் வட பகுதியையும் இணைத்த ஒரு புதிய தேசத்தின் தலைவராக தான் மாற வேண்டும் என்பதே அது. அது போலவே தெற்கிலும் பாக ஆதரவோடு கெக்மாட்டியாரும் ஏனைய சிறு சிறு குறுநில மன்னர் போல் பல்வேறு குழுக்கள் தத்தமது ஆதிக்கத்தை உறுதிப்படுத்த முயல்கின்றன. என்வே தடியெடுத்தவன் தண்டல்காரன் என்கிற நிலையில் ஆப்கான் எதிர்காலம் கேள்விக்குறியாகின்றது. இத்தகைய நிலையிலே முன்னைய நஜிபுல்லா ஆட்சி அல்லதுமன்னர் சாகிர்சா(Za-hirshah)ஆட்சிபற்றிமக்கள்சிந்திக்கத்தலைப்படுவதாகக் கூறப்படுகின்றது. ஆனால் தற்போது சிறைக் கைதியாகவுள்ளார் நஜிபுல்லா. அவரது வீழ்ச்சியின் பின்னர் அவரது அணியினர் கெக்மாட்டியார் பக்கமும் றபானி பக்கமுமாகத் தமது இனச் சார்பிற்கேற்ப இணைந்து விட்டனர். எனவே ஆப்கான் மக்களைப் பொறுத்தவரை இன்று எவ்வித தெரிவிற்கும் இடமில்லாத நிலையேயுள்ளது. ஏதாவது ஒரு பகுதி அழிந்தாலேயே முடிவேற்படும் என்பதே அவர்களின் இன்றைய பட்டறிவு.ஏனென்றால் காபூலை கைப்பற்ற நடக்கும் பாரிய மோதல்களில்

(10ஆம் பக்கம் பார்க்க)

# சீதனம்: காலம் போட்ட கைவிலங்கு

திருமதி மனோன்மணி சண்முகதாஸ்

உலகத்தில் இயற்கையின் நியதிக்கேற்ப, ஆண் பெண் என இருவகையான, மனிதப் பிறப்புக்கள் தோன்றி வாழ்ந்து வருகின்றன. இவையிரண்டும் உடலமைப்பிலும் குண இயல்பிலும் வேறுபாடுகள் சிலவற்றைக் கொண்டுள்ளன. ஆண் வலியவன். பெண் மென்மையானவள் என்ற அடிப்படையான வேறுபாடு, உடல் தோற்றத்தால் விளங்க உணர்வு நிலையிலும் சில வேறுபாடுகள் இருந்தன ஆணும் பெண்ணும் இணைந்து, கணவன் மனைவி எனப் பெயர் பூண்டு, சமூகத்தில் குடும்பம் என்னும் கட்டமைப்பைப் பேணிவந்தனர். காலம் காலமாகக் குடும்பம் என்ற நிலையில் ஆணும் பெண்ணும் ஒன்றுபட்டு வாழ்க்கை நடத்துகின்றனர். குழந்தைகளை உருவாக்குகின்றனர் இயற்கையின் நியதியில் குழந்தையை வயிற்றிலே தாங்கி, அதனைப் பெற்று வளர்க்கின்ற பெரிய பணி பெண்ணிடம் சேர்ந்திருந்தது. இதனால் பண்டைய காலத்தில் பெண் பேராற்றல் பெற்றவளென மதிக்கப்பட்டாள். அவளது சிறப்புக் குணமான தாய்மைப் பண்பு ஆணையும் வழி நடத்துகின்ற ஆற்றல் பெற்றிருந்தது. எனவே ஆண் பெண்ணோடு இணைந்து வாழ்க்கை நடத்துகையில் இந்தப் பேராற்றலுக்குப் பணிந்தே இயங்கினான். இதுவே தமிழர் பண்பாடாக வளர்ந்து வந்தது தமிழர்பண்பாட்டிலே ஆரியப்பண்பாடு கலந்த வேளையில் இந் நிலைமாற்றமடையலாயிற்று. பெண்ணின் ஆற்றல் ஆணின் ஆற்றலை விடக் குறைந்தது என்ற நிலை உருவாகியது. இன்னும் பெண் என்பவள் ஆணுக்கு கட்டுப்பட்டு இருக்க வேண்டியவள். அவளுக்குத் தனித்துஇயங்குகின்றஆற்றலே இல்லை என்ற கருத்துக்களும் உருவாகலாயிற்று இக் கருத்துக்களை மனுதர்மசாஸ்திரம் ஆவணநிலையிலே உறுதிப்படுத்தியிருந்தமையால் உலகமும் அதையே போற்றிப் பேணலாயிற்று.

இத்தகைய ஆணைச் சார்ந்து, அவன் கட்டுப்பாட்டினுள் வாழ்கின்றபெண்ணுக்கு; அவளுக்கு வாழ்க்கையிலே பொருளாதாரப் பலத்தை ஏற்படுத்துவதற்காக, அவளுடைய பெற்றோர் பொருளைக் கொடுத்து ஆணுடன் அவளைத் திருமணம் என்ற நிலையில் இணைத்து விடுகின்ற வழக்கமே தோன்றலாயிற்று. இதுவே வடமொழித் தொடர்நிலையில் 'ஸ்த்ரீதனம்' என வழங்கப்பட்டுக் கலகதியில் ஸ்ரீதனம் என மருவித் தமிழிலே சீதனம் என நிலைபெற்றுவிட்டது. தமிழர் பண்பாடு பற்றி அறியத் தருகின்ற பழைய இலக்கிய இலக்கண நூல்களிலே சீதனம் பற்றிச் செய்திகள் இல்லை. அதற்கு மாறாக அக் காலத்திலே தமிழரிடையே நிலவிய பிறிதொரு வழக்கமே பழைய இலக்கியங்களிற் பேசப்பட்டது திருமணம் செய்யும் போது பெண்ணுக்கு முலை விலையாக ஆண் பொருள் கொடுக்கின்ற வழக்கமே இருந்துள்ளது. அந்த முலை விலையாக நாடுகூடக் கொடுக்கப்பட்டதாகப் பாடற்குறிப்புகள் காணப்படுகின்றன.

சங்க இலக்கியங்கள் இந் நடைமுறையை நன்கு ஆவணப்படுத்தியுள்ளன. ஆனால்பிற் காலத்தில் இவ் வழக்கம் மாறித் திருமணத்தின் போது பெண் தாய் வீட்டிலிருந்து செல்வங்களோடு வரவேண்டும் என்ற நடைமுறை உருவாகிற்று. இதுவே இன்று சீதனம் கொடுக்கின்ற வழக்கமாக நின்று நிலைத்துவிட்டது.

திருமண உறவினை ஏற்படுத்தும் நிலையிலே இன்று சீதனம் பெருந்தடையாக அமைகின்ற அளவிற்கு அதனுடைய ஆற்றல் வளர்ந்து விட்டது. பெண்ணுடைய ஏனைய ஆற்றல்களையெல்லாம் தடுத்து நிறுத்திச் சீதனம் அவளைக் கட்டுப்படுத்துகின்ற ஒரு சமூக நடைமுறையாகவும் மாறி விட்டது. பெண்ணின் திருமணம் சீதனம் கொடுத்தால் தான் நடைபெறும் என்றும் இன்று எல்லாராலும் எண்ணப்படுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது பல குடும்பங்களிலே இச் சீதன வழக்கத்தால் திருமண உறவே வாணிகநிலையிற் செய்யப்படுகின்ற ஒரு சடங்காக அமைந்து விட்டது பெண்ணின் அழகு, கல்வி, உடல்வலு, செயலாற்றும்திறன் என்பன இச் சீதனத்தின் முன் முற்றாக வலியழிந்துவிட்டன அவளுடைய தாய்மை என்னும் பேராற்றல் மதிப்பிழந்தது. பெண்ணடிமையை மேலும் கூர்மைப்படுத்துகின்ற ஒரு செயலாகச் சீதனம் வாங்கும் நடைமுறை இன்று விளங்குகிறது. இதனால் பெண்கள் மட்டுமன்றி ஆண்களுமே பெரும் சிக்கல்களை எதிர் நோக்க வேண்டியவராகியுள்ளனர். எனவே இன்று இச்சீதன நடைமுறை பற்றி மீளாய்வு செய்து நமது தமிழர் பண்பாட்டுக்கு அதன் பொருத்தமின்மையை எடுத்துக்கூறவேண்டியது எமது பணியாகவுள்ளது.

ஒத்த வயது, ஒத்த அழகு. ஒத்த கல்வி, ஒத்த குணம் என்ற நிலையில் ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்வதற்கு பொருத்தமானவர்களாக இருப்பினும் சீதனம் இடையிலே வந்து அவர்களுடைய பொருத்தப்பாட்டை நிலைகுலைய வைக்கின்றது. அவர்கள் ஒருவரையொருவர் விரும்பித் திருமணம் செய்து வாழ்க்கை நடத்த முயன்றாலும் சீதனம் அதற்கு இடையூறாக நிற்கின்றது இந்நிலையில் இந்த இடையூறை எப்படி விலக்குவது என்பது எம் முன்னே கேள்வியாக; விடையைத் தேடவேண்டிய காலமும் வந்துவிட்டது. 'சீதனம்' என்னும் வழக்கத்தின் இடைக்காலத் தோற்றத்தைப் பற்றி எவருமே இப்போது எண்ணிப் பார்ப்பதில்லை. சீதனம் வாங்குவது என்பது மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே வாழ்க்கை நடைமுறையாக இருந்ததெனப் பலர் கருதி வாழ்கின்றனர். சிறப்பாகத் தமிழர் பண்பாட்டில் சீதனம் இடைக்காலத்திலேயே இடம் பிடித்துக் கொண்டதை எல்லோருமே மறந்துவிட்டனர். இடையிலே முளைத்த இக் களையைக் கிள்ளி பிடுவதும் எளிதானதே.

சீதனம் வாங்குதல் இப்போது குற்றம் என்று உணர்த்தப்படவேண்டிய நிலை உருவாகியுள்ளது எமது தமிழ்ச் சமூகத்தில் சீதனத்தின் கொடுமைகள் பெருகிவிட்டன. பல தலைமுறையாக மக்களையே வருத்துகின்ற அரக்கனாக இன்று சீதனம் கணிக்கப்படுகிறது. இந்த அரக்கனின் அழிவிற்கு ஆண்கள் போராடப் பின்னிற்கும் இவ்வேளையிலே பெண்களே அதைச் செய்ய வேண்டியவர்களாயுள்ளனர். பெண் தனது அறிவாற்றலாலும் அனுபவத்தாலும் 'சீதனம்' என்னும், சமூகத்திலே புரையோடிப் போன புண்ணுக்கு, மருந்திட்டு மாற்ற வேண்டியமருத்துவராகவேண்டும் கல்வியறிவினால் சீதனத்தின் தேவையின்மை எல்லோருக்கும் விளக்கப்பட வேண்டும். இன்று ஆணும் பெண்ணும் சரிநிகராக எல்லா அறிவுத்துறைகளிலும் முன்னேறி வரும வேளையில் இந்தச் சீதனத்தை முற்றாக அழிக்கின்ற பணியினைப் பெண்களே செய்ய வேண்டும். தாய்மை நிலையில் ஆண்களை வழிநடத்துகின்ற பெண்களுக்கு இப்பணி செய்வதும் எளிதே. எனினும் மனத்துணிவும் செயற்றிறனும் இன்றி இப்பணி செய்வதென்பது எளிதல்ல. பெண் தன்னளவிலும் குடும்ப நிலையிலும், நாட்டு நிலையிலும் சீதனம்' பற்றிய தெளிவினை ஏற்படுத்த வேண்டியவள். அவளுடைய சகல பணிகளுமே 'சீதனம் ஒழிப்பு, என்ற இலக்கை நோக்கியதாக அமைய வேண்டும். இதற்குரிய இக் காலத்திற்குப் பொருந்தக்கூடிய சில வழிகளை இங்கே எடுத்துரைப்பதும் பொருத்தமாகும். இன்றைய விஞ்ஞான யுகத்திலே மனித வாழ்கை பற்றிய விளக்கங்கள் எல்லோராலும் எளிதில் உணரப்படலாம் அறிவியற்றுறையிலே பணியாற்றும் அனைவரும் ஒருங்கிணைந்து 'சீதனம்' என்னும் வழக்கத்தை, வேண்டாத நடைமுறையைப்பற்றி எல்லோரும் உணரும் வகையில் கருத்து நிலையிலே மட்டுமன்றிக் காட்சிநிலையிலும் பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் ஆண், பெண் என்ற பாகுபாடின்றி இருவகுப்பினரும் இணைந்து இதுபற்றி செயற்திட்டங்களை ஆக்கி நடைமுறைப் படுத்த வேண்டும் இதன் ஆரம்ப ஒழுங்காக இன்று சீதனம் தடைச் சட்டம் கொண்டுவரப்படுவதே நன்று சீதனம் வாங்குதல் மனித தவறுகளில் ஒன்றாக விளக்கப்பட்டால் அது மனிதரால் தவிர்க்கப்படும் நடைமுறையுமாகி விடும் பாரதி கூறிய புதுமைப் பெண் ''சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்'' என்றான் இது வெறுமனே புதுமைப் பெண்ணுக்குரிய பண்புகளில் ஒன்றாக மட்டும் அமைந்துவிடாமல் அவளால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்பாடாக மறவேண்டும் சீதன ஒழிப்புச் சட்டத்தை பெண்களே முன்னின்று நடைமுறைப் படுத்த வேண்டும் தவறு செய்பவர் யாராக இருந்தாலும் அவர் ஒறுப்புக்குரியவரே இந் நிலையில் சீதனம் வாங்கும் நடைமுறையிலே பங்குகொள்ளும் பெற்றோர், அண்கள், திருமணத் தரகர், உறவினர், நண்பர்கள், அனைவருமே அடங்குவர் பெண்களே முன்னின்று இதில் பங்குகொள்பவரை இனங்கண்டு அவ்வாறு பங்குகொள்பவரின் அறியாமையைப் போக்க ஆவன செய்ய வேண்டும்.

பொருள், பணம், நகை, பூமி என்ற பல வடிவங்களிலே தோன்றும் சீதனத்தைச் சில வேளைகளில் இனங்காண்பதும் அரிது. நேரடியாக வாங்கும் நடைமுறை தவிர்க்கப்பட்டு இன்று மறைமுகமாக வாங்கும், கொடுக்கும் நிலைகளும் உருவாகிஉள்ளன எனவே அத்தகைய மறைமுகமாக இயங்கும் நிலைகளைக் கண்டுபிடித்து இக்குற்றத்தை வேருடன் களைய வேண்டும்.

குடும்ப நிலையிலே பெண் தாய் என்கின்ற தலைமைத்துவப் பணியாற்றும் வேளையில் சீதனம் பற்றிய தெளிவான கருத்தினைத் தனது குழந்தைகளுக்குச் சிறந்த முறையில் அறிவூட்ட முடியும் குழந்தைகள் வளர்கின்ற நிலையிலே சீதனம் பற்றிய தெளிவான விளக்கம் மனதிலே பதிய வைக்கப்படவேண்டும். வீடு என்ற வட்டத்திற்கு அப்பால் சமூகம் என்ற நிலையில் பெண்ணினுடைய பங்களிப்பு முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும், சமூக மக்களுக்குரிய அறிவூட்டல் நிலையான பணிகளையும் பெண்களே செய்ய வேண்டும் சமூக நிறுவனங்களின் தொடர்புடன் சமூகத்தவரை ஒன்றிணைத்து பல செயற்றிட்டங்களை அமைத்துஅதனை நடைமுறைப்படுத்த வேண்டும் சீதனம், வாங்க வேண்டும், என ஆண்களிடையே நிலவுகின்ற போலியான மதிப்பீட்டையும் அழிக்க வேண்டும். உழைப்பின் பெருமையை யாவரும் உணர்ந்து கொண்டால் சீதன ஒழிப்பும் இலகுவாகும். நாட்டு நிலையிலே சீதன ஒழிப்புச் சட்டம் நல்ல முறையிலே நடைமுறைப்படுத்தப் பட வேண்டும் திருமணம் தொடர்பான நடைமுறைகளைத் தெளிவாக மக்கள் அறிந்து கொள்ள வகை செய்ய வேண்டும்.

சீதனச் சட்டம் நடைமுறையில் பயன்பாடு அற்றது என்றும் பலர் இன்று கருதுகின்றார்கள் ஒரு சட்டம் இயற்றப்படும் போது அதற்குரிய தேவை என்ன என்பது தெளிவாக விளக்கப்படுமானால் அதனை நடைமுறைப்படுத்துவதும் எளிதாக இருக்கும் எனவே இயக்கமாகத் தொழிற்பட்டுஎல்லோரும்இணைந்து இச் சட்டத்தைஆக்குவதுடன் மட்டுமன்றி நடைமுறைப்படுத்தவும் வேண்டும் அதே வேளையில் சமூகத்தின், நாட்டின் சகல மட்டங்களிலும் சீதனம் பற்றிய தெளிவானஅறிவூட்டல் நடைபெற வழிசெய்ய வேண்டும் தமிழர் பண்பாடு பேணும் முயற்சியாய் இத்தகைய தமிழர் பண்பாட்டையே கேவலப்படுத்துகின்ற நடைமுறைகளை சட்ட மூலம் தடை செய்வது தேவையான தொன்றாகும் பெண்ணின் நல்வாழ்வுக்காக மட்டுமன்றிக் குடும்பம் எனும் கட்டமைப்பின் வளர்ச்சிக்கும் நிலைப் பேற்றுக்கும் இது மிகவும் வேண்டப்படுவதொன்றாகும் சீதன விலங்கிட்டு வாழும் பெண்ணின் போலி விலங்கினை உடைத்து உழைக்கும் கரங்களில் உறுதியான பண்பாட்டு நடைமுறையைக் கையளிக்க இந்தத் தலைமுறையினர் ஆவன செய்யவேண்டும் பெண்ணடிமை என்று பிரித்து நோக்காது ஆணும் பெண்ணுமாய் இணைந்த இனிய குடும்ப உறவு இறுக்கமாய் அமைய இதுவே வழியாகும்.

பெண்களே சீதனம் வாங்குவதில் முன்னிற்கிறார்கள் என்ற கருத்தும் இப்போது நிலவிவருகிறது ஆண் குழந்தையைப் பெற்ற தாய்மார் அக் குழந்தைக்காகத் தாம் செலவிட்ட பணத்தை அதுவும் அக்குழந்தை வளர்ந்து பெரியவனாகிப் படித்துத் தொழில் பார்க்கின்ற காலம் வரை செலவிட்ட பணத்தை அவன் திருமணம் செய்கின்ற போது பெண்ணின் பெற்றோரிடம் அறவிடநினைக்கின்றனர் இதனால் பெண்ணைப் பெற்றவர்கள் தமது பெண் குழந்தைகளுக்கு கல்வியில் திறமை பெற்று பெரிய பணிகளிலே அமர்ந்திருப்பவர்களாக இருந்தாலும் சரி பெருந்தொகையான பணத்தைக் கொடுத்தே அவர்களுக்குத் திருமணஞ் செய்துவைக்க வேண்டியுள்ளது. இந் நிலை பெண்களால் மட்டும் மாற்ற முடியாதது. படித்த ஆண்களே திருமணத்தில் தங்களை விற்பதற்குத் தயாராக இருக்கிறார்கள் 'சீதனம்' வேண்டுவது தாயின் விருப்பம் என்று தாயைக் காரணமாகச் சொல்லிப் பணத்தை வாங்குகிறார்கள் இன்னும் படித்த பெண்கள் தங்களுக்கு சீதனம் வேண்டுமென்று பெற்றோரிடம் வற்புறுத்துகின்ற நிலையும் இன்று காணப்படுகின்றது ஆண்களும் பெண்ணின் பெற்றோரிடம் பணம் வாங்குவது இழிந்தது என நினைப்பதில்லை. இத்தகைய நிலைகளில் சீதனம் வாங்குகின்றநடைமுறை நமது சமூகத்தில் நிலைபெற்றுவிட்டது. எதிர் காலத் தலைமுறையினரும் இதனைத் தொடராவண்ணம் இப்போதே தடுக்கவும் வேண்டியுள்ளது ஆண்களும் பெண்களும் தத்தம் அறிவாற்றலைப் பயன்படுத்தி இச் சீதனம் என்கின்ற நடைமுறையை நமது சமூகத்திலிருந்து அகற்ற வேண்டும்.

இன்றைய சமூகத்திலே இளைஞர்பலசமூகப்பணிசெய்வதிலே ஆர்வமுடையவர்களாக இருக்கிறார்கள் இவர்களின் சமூகப்பணியினை இச் சீதன ஒழிப்புக்கு என திட்டமிட்டுக் கொடுத்தல் நன்று நாட்டைப் பாதுகாக்கும் பணியுடன் நமது பண்பாட்டுப் பாதுகாப்புப் பணியும் சேரவேண்டும். பெண்ணை இழிவுப்படுத்திக் காட்டும் இலக்கியங்களின் உண்மை விளக்க நிலையை எல்லோருக்கும் எடுத்துக் கூற வேண்டும் சீதனம் இடைச்செருகல் நிலையில் இலக்கியத்தில் இடம் பெற்றதொரு அம்சமாகும் என்பதை அனைவரும் உணர்ந்தால் சீதனம் என்ற இடைக்கால விலங்கு பெண்ணின் கரத்திலிருந்து கழன்றுவிடும்.

புதிய இரெட்டணம் மருந்தகம்

திறப்பு விழா அழைப்பிதழ்

(பார்மஸி அன் குறொசரீஸ்)

இடம்: 392, மருத்துவமனை வீதி,
(ஸ்ரேசன் சந்திக்கு அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

காலம்: 20-05-94 இன்று வெள்ளிக்கிழமை
பகல் 11.56 முதல் 12.52 மணி வரை

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இங்ஙனம்
திரு. திருமதி டாக்டர்கள்
இராஜரெட்ணம் தம்பதிகள்

(8327)

## சொத்தி உபாலி யார்?

# ஐ.தே.கவின் சட்டபூர்வமற்ற கொலைப்படையா? கிரிமினல்களின் பாதாள உலக மன்னனா?

அதிகாரப் போட்டியில் வெற்றி வாகை சூடுவதற்காக குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுப்பது சரியா என்ற கேள்வியே கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் இருக்கும் கோப்பிக் கடைகள் மற்றும் மக்கள் சந்திக்கும் மையங்களில் மட்டுமன்றி அதிகார பீடத்தின் சந்து பொந்துகளிலும் கடந்த வாரத்தில் விவாதிக்கப்பட்ட முக்கிய விடயமாக இருந்தது இவ்வாறு சண்டே ரைம்சின் பத்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களின் பிடியிலிருந்து கட்சியை காப்பாற்ற வேண்டும் என்றும் குற்றச்செயல்களில் ஈடுபடும் காடையர்களின் அரசியலில் இருந்து கட்சி விடுபட வேண்டும் என்றும் பொதுவான கருத்து இப்போது காணப்படுகிறது என மேலும் கூறப்படுகிறது

டி. பி.வி ஜதுங்கா அரசுபாதாள உலக மன்னர்கள் மீது திடீரெனக் கவனம் செலுத்தத் தொடங்கியிருப்பது ஏன்? நீண்டகாலமாக அபயம் அளித்து வந்த அரசியல்வாதிகள் தற்போது குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களை கைவிட்டிருப்பது அல்லது காட்டிக் கொடுத்திருப்பது ஏன்? இந்த நபர்கள் உண்மையிலேயே குற்றவாளிகளா? அல்லது ஆளும் கட்சி முக்கியத்தர்கள் சுட்டிக்காட்டும் இலக்குகளை நிறைவேற்றும் நாயகர்களா? இந்தக் கேள்விகளுக்கான விடைகள் இன்று மூடிமறைக்கப்பட்ட உண்மைகள் இப்போது அம்பலத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. இந்த வகையில் சொத்தி உபாலியின் விவகாரம் ஒரு வகை மாதிரிமட்டுமே.

### யார் இந்த சொத்தி உபாலி?

கொழும்பு நகரின் நாரஹேன்பிட்டிய பகுதியிலுள்ள அறுபதாவது தோட்டத்தின் சேரிப் பகுதியில் வாழ்ந்து வந்தவன் டொன்றஞ்சித் உபாலி சிறு வயது முதலே கசிப்பு காய்ச்சுதல் சட்ட விரோத கடத்தல்கள், போதைப் பொருட்களின் வியாபாரம்போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தவன். போதைப்பொருட்களை பயன்படுத்தும் பழக்கமுடையவன், வீட்டுக்கு வெளியே உலரவிடப்படும் சாதாரண உடுப்புக்களைக் கூட திருடி விற்று தனக்கு தேவையான போதைப் பொருள் கொள்வனவுக்கு பணம் தேடிக் கொள்ளும் சுபாவம் உடையவன்.

ஒருமுறை தான் வசித்து வந்த அறுபதாவது தோட்ட உரிமையாளரின் மேலாடையைத் திருடும்போது கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு இரும்புக் கம்பியால் தாக்கப்பட்ட போது இவரது கை ஒன்று முறிந்தது இந்தச் சம்பவத்திற்கு பின்னர் டொன்றஞ்சித் உபாலி 'சொத்தி உபாலி' என்று அழைக்கப்படலானான். இந்தச் சம்பவத்தை தொடர்ந்து தோட்டப் பக்கம் தலைகாட்ட முடியாத உபாலி வீதிகளில் அலைந்து திரிந்தான்.

இவனது இந்த நிலையைக் கேள்வியுற்ற அப்போது அமைச்சராக இருந்த பிரபல அரசியல் வாதி ஒருவர் தனது நாரஹேன்பிட்டிவீட்டுக்கு அருகேயுள்ள தொடர்மாடியொன்றில் ஒரு வீட்டை உபாலிக்கு ஒதுக்கிக் கொடுத்தார் எந்தப் பொலிசார் உபாலிக்கு வலை வீசித் தேடினரோ அவர்களே பாதுகாப்பு வழங்க வேண்டிய நிலை அன்று முதல் ஏற்பட்டது. சட்டபூர்வ மற்ற வகையில் ஆனால் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளால் கட்டுப்படுத்த முடியாத ஒரு நிலையில் நின்று சட்ட விரோதமான வியாபாரங்கள், கள்ளக்கடத்தல்கள், கொலை என்பவற்றை மிகவும் பகிரங்கமாகவே செய்யக் கூடிய நிலை உபாலிக்கு வாய்த்திருந்தன.

தனக்கென ஒரு குழுவை அமைத்தான் தன்னை எதிர்ப்பவர்களையும், தனது தொழில்களுக்கு போட்டியாக வருபவர்களையும் பட்டப்பகலில் கூட பலர் முன்னிலையிலும் கொலை செய்தான் தனக்கு எதிராக தகவல் கொடுப்பவர்களைப் பொலிசார் மூலமே தாக்க வைத்தான் புகார் எழுதும்படி அல்லது புகார் எழுதக்கூடாது என்று பொலிசாருக்கு கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கும் அளவிற்கு உபாலியின் அதிகாரம் இருந்தது. பொலிசாரின் பூரண மரியாதையும், அமைச்சர்களின் நல்லாசியும் அவனுக்கு தாராளமாகவே கிடைத்தது இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது கண்ணீரை மட்டுமே விட முடிந்தது வாய்விட்டுக்கதறி அழுவதற்கு கூட அவர்களுக்கு சுதந்திரம் வாய்த்திருக்கவில்லை.

அரசியல் நாடகத்தில் தோன்றும் வில்லன்களை ஒழித்துக் கட்டுவதற்கு ஐ.தே.க உயர்பீடத்தைச் சேர்ந்தவர்கள் இவனைத் தட்டிக்கொடுத்தனர் உற்சாகம் ஊட்டினார்கள் இதனால் பல வேளைகளில் ஆயுதங்களுடன் தனியார் வாகனங்களில் தன்னிச்சையாக நடமாடி தனது இலக்குகளை தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தான் அரசியல் காரணங்களுக்கான பல கொலைகளை உபாலியினால் கனகச்சிதமாகச் செய்து முடிக்கப்பட்டு உள்ளது.

சாதாரண பொலிஸ் கான்ஸ்டபிளிலிருந்து இராணுவ அதிகாரிகள் வரை பலரும் இவனது எடுபிடிகளாகவே செயல்பட்டிருப்பது இப்போது அம்பலமாகி இருக்கிறது இதனால் சட்ட ரீதியான அங்கீகாரம் இல்லாத போதும் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அமைப்பு போலவே உபாலி செயற்பட்டான் இவனது நடவடிக்கைகள் நாட்டைக் கதிகலக்கி வந்தது வெலிக்கடை சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டிருந்த ஒருவர் அங்கு வைத்தே தாக்கப்பட்டு கால்முறிந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமான சம்பவத்திலும், 1989 செப்டம்பரில் கொழும்பின் இராஜகிரிய பகுதியில் இறைச்சிக்கடை ஒன்றைப் பெற முயன்ற வேலுப்பிள்ளை தோட்டப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு அதனைக் கிடைக்காமற் செய்வதில் அரசியல்வாதி ஒருவரின் உதவியைப் பெற்றதுடன் அதே குடும்பத்தைச்சேர்ந்த ஐந்து பேர் கொல்லப்பட்ட விடயத்திலும் உபாலிக்கு நேரடித் தொடர்புகள் இருந்துள்ளது என்பது உபாலியின் செல்வாக்கை உணர்த்தும்.

இத்தனைக்கும் மேலாக கடந்த மே மாதம் மூன்றாம் திகதியன்று நீர்கொழும்பு பகுதியிலுள்ள நீதிமன்ற வளவில்வைத்து நீதிமன்றம் நடந்து கொண்டிருந்த வேளையிலே சிந்தக அமரசிங்கா என்பவரை சுட்டுக்காயப்படுத்திய சம்பவத்தில் உபாலியின் பங்குதான் இப்போது அவனைப் பொலிசார் தேட வேண்டிய நிலையை ஏற்படுத்தியது சிந்தக அமரசிங்காவின் குடும்பத்தைச் சேர்ந்தஎட்டுப் பேரின் மரணத்திற்கு உபாலி காரணமாக இருந்துள்ளான் இக்குடும்பத்தை சேர்ந்த பசில் அமரசிங்க 1988 ஏப்பிரல் 29லும், நோவேச் அமரசிங்க 1988 ஜூலை6ல் வெலிக்கடைச்சிறையில் வைத்தும், 1988 ஆகஸ்ட் 15ல் ஜோன்சோமபால பெரேராவும் 1988 அக்டோபர் 23-ல் ஜோசப் அமரசிங்கவும், ஓவா அமரசிங்க என்ற பெண் பாலியல வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் கற்குழி என்ற இடத்தில் வைத்தும் கொல்லப்பட்டுள்ளனர்

இவ்வாறான கொலைகளை எந்தச்சஞ்சலமும் இல்லாமலேயே இவனது அடியாட்கள் செய்துள்ளனர் அரசியல்வாதிகள் திரைமறைவில் வழங்கிய ஒத்துழைப்புதான் உபாலியின் இத்தகைய செயல்களுக்கு காரணமாகும்.



### ஐ.தே.கவின் திடீர் திருப்பம்

மே 3ம் திகதி நீர்கொழும்பு நீதிமன்ற வளவில் இடம்பெற்ற சம்பவத்தை தொடர்ந்து உபாலி பொலிசாரால் தேடப்பட்டான் என்றாலும் இதற்கு முன்பாக இத்தகையகுற்றச்செயல்கள் இடம்பெற்ற போது காட்டியிராத அசாதாரணமான அக்கறையை இச் சம்பவத்தில் பொலிசார் காட்டியிருந்தனர் இதற்கும் பின்னணியில் அரசியல் காரணங்கள் பல இருப்பதாகவே கருதப்படுகிறது குற்றச்செயல்களில் தொடர்புள்ளவர்களிடம் இருந்து கட்சியையும், அரசியலையும் மீட்பதற்காகவே உபாலி போன்றோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஜனாதிபதி டி பி விஜேதுங்கா காட்டிக்கொள்ள முற்படுகிறார். பொதுச்செயலாளர் பதவியிலிருந்து விலக்கப்பட்ட சிறிசேன கூரேயின் ஆதரவாளர்கள் தமது நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து காட்டி வரும் எதிர்ப்பை கட்டுப்படுத்தவும், குற்றச்செயல்களில் தொடர்புடைய கிறிமினல்களுடன் தமக்கு தொடர்பு எதுவும் இல்லை எனக்கூறித்தப்பித்துக் கொள்ளவும் டி. பி. விஜேதுங்கா இத்தகைய போக்கை கடைப்பிடிப்பதாகச் சொல்லப்படுகிறது.

சிறிசேன கூரேயையும் அவரது ஆதரவாளர்களையும் ஓரம்கட்டுவதற்கு கொலைகள் மற்றும் அரசியல் வன்முறைகளில் ஈடுபட்டார்கள்எனக் காரணம் காட்டுவதற்கும் டி பி. விஜேதுங்கா முற்பட்டுள்ளார். இவ்வாறு தெரிவிப்பதன் மூலம் இத்தகைய தமது அரசியல் எதிரிகளை இலகுவில் முறியடித்து விடலாம் என்பதே அவரது எதிர்பார்ப்பாக உள்ளது. டி பி யின் இத்தகைய எதிர்பார்ப்பு எவ்வளவுக்கு சாத்தியம் என்பதே இப்போதைய பிரச்சினை உபாலி பொலிசாரினால் தடுத்து வைக்கப்படும்வரை இறுக்கமான மௌனத்தைக் கடைப்பிடித்து வந்த சிறிசேன கூரே இப்போது உபாலி ஐ தே.கவின் அங்கத்தவர்களில் ஒருவர் என்றும், கிளை கமிட்டியின் முக்கியத்தவர்களில் ஒருவர் என்றும் திடீரெனத் தகவல்களை வெளியிட்டிருப்பது கொலைக்கும்பல்களுக்கும்ஐ தே கவுக்கும்இடையிலான உறவு எப்படி இருந்துள்ளதுஎன்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு

ஜே வி பியினரின் செயற்பாடுகள் உச்சம் பெற்றிருந்த வேளையில் கட்சிக்காக சுவரொட்டி ஒட்டுவதற்குகூட எல்லோரும் பயந்து கொண்டிருந்த வேளையில் உபாலி துணிவுடன் செயற்பட்டார் என்றும் கட்சி முதலில் அதனைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்றும் சிரேஷ்ட அமைச்சரும் முன்னாள் பொது செயலாளருமான சிறிசேன கூரே உபாலியின் கைது தொடர்பாக கருத்து வெளியிட்டிருக்கிறார் அதாவது இவர் கட்சியின்நலனுக்காக செய்தவற்றை மறந்துவிடக் கூடாது என்றும் ஐதே க ஆட்சி பீடம் ஏறுவதற்கு இத்தகையவர்களின் செயற்பாடே காரணம் என்று கருதும் சிறிசேனகூரே இவரைக் கைதுசெய்வது சரியனதா தகுந்த செயலா என்றும் மறைமுகமாகக் கேள்வி எழுப்புகின்றார்.

### கைதா? சரணா?

சொத்தி உபாலி பொலிசாரால் கைது செய்யப்பட்டாரா? அல்லது பொலிசாரிடம் அவர் சரண் அடைந்தாரா? என்பது தொடர்பாக இப்போது பொலிஸ் திணைக்கள மட்டத்திலேயே அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன. கட்டுகஸ்தோட்டப் பகுதியிலுள்ள வீடொன்றில் சொத்தி உபாலி தங்கியிருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து கட்டுகஸ்தோட்ட பொலிசார் அப்பகுதியை சுற்றி வளைத்து அவரது சகோதரிகளான சுனீதா, சாந்தி, மாகிரட் ஆகியோரைக் கைது செய்ததுடன், அவர்களது வீட்டிலிருந்து ஆயுதங்கள் மற்றும் ரவைகளையும் கைப்பற்றியுள்ளனர். கட்டுகஸ்தோட்ட பொலிசார் தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்டிருக்கையில் பம்பலப்பிட்டியிலிருந்து

**நிமலராஜன்**

இப்பகுதிக்கு விரைந்து வந்த வேறொரு பொலிஸ் கோஷ்டி அதிகாலை நான்கு முப்பது மணியளவில் உபாலியைக் கண்டுபிடித்து பம்பலப்பிட்டிக்கு கொண்டு வந்துள்ளனர்.

கட்டுகஸ்தோட்ட அனுலா வித்தியாலயமருகே உபாலி நடமாடுவதாக தகவல் கிடைத்தது எனவும், கட்டுகஸ்தோட்ட பகுதியில் உபாலி வாடகைக்கு பெற்றதாகக் கூறப்படும் வீடு உட்பட அப்பகுதியை சுற்றி வளைத்து காவல் புரிந்ததாகவும், எனினும் காலையில் புத்தகக் கடை ஒன்றிற்கு புதினப் பத்திரிகை வாங்குவதற்கு உபாலி வந்தபோது இனங்காணப்பட்டு கைது செய்யப்பட்டதாகவும் பம்பலப்பிட்டி பொலிசார் கூறியுள்ளனர்.

பல குற்றச் சம்பவங்களுடன் நேரடித் தொடர்புடைய பல கொலைச்


(11ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பை மட்டும் மையமாகக் கொண்டு பதினொரு குழுக்களின் தலைமையில் பாதாள உலகம் இயங்கி வந்துள்ளது. இக் குழுக்களுக்கிடையே இடம் பெற்ற மோதல்களில் மட்டும் எட்டுவருடங்களிலும் 119பேர் கொல்லப்பட்டிருப்பதாக பொலிஸ் திணைக் களத்தின் புலன் விசாரணைப்பகுதியினர் தெரிவித்துள்ளனர்

பயங்கர ஆபத்துவிளைவிக்கும் நவீன துப்பாக்கிகள், மற்றும் ஆயுதங்கள், வாகனங்கள் இவர்கள் வசம் இருக்கின்றன. தத்தமக்கென எழுதாத உடன்பாட்டின் மூலம் வரையறுக்கப்பட்ட பகுதிகளிலிருந்து பல கொலைகளிலும், சட்ட விரோத நடவடிக்கைகளிலும் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்

1986இல் மட்டும் ஒப்பந்த அடிப்படையில் 13பேர் கொல்லப்பட்டுள்ளனர். இராஜகிரிய பகுதியில் செயல்பட்ட குழுவே இக் குழுக்களில் பெரியதாகும். பாலத்துறை கொலன்னாவ, இராஜகிரிய, கடுவல, தெகிவளை, ரத்மலானை, பத்தரமுல்ல, கொம்பனித் தெரு, மாளிகாவத்தை, மருதானை, புறக்கோட்டை என்பவை இக் குழுக்களின் மையங்களாக இருந்துள்ளன.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 17 - 10 - 1935

மறைவு: 30 - 05 - 1993

திதி: 20 - 05 - 1994

### அமரர் வைத்திலிங்கம் பாலசுந்தரம்
(ஐயா)

[இ. போ.ச சாரதி, தோப்பு - அச்சுவேலி]

அன்பின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய் பாசத்தின் இருப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து திடீரென மறைந்துவிட்ட எம் இனிய தெய்வமே! தாங்கள் நிழல் தரும் ஆலமரம் என நினைத்திருந்தோம் - ஐயா நிலையான நிழல்தேடி இறைவனடி சேர்ந்துவிட்டீர்கள். ஆண்டு ஒன்று மறைந்தாலும் உங்கள் கனவுகளை எங்கள் நெஞ்சங்களில் சுமந்து என்றென்றும் உங்கள் பாச நினைவுடன் வாழுவோம் அதுவரை உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்
மருமகன்

ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்

(8308)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்
23.05.1994



தோற்றம்: 02-10-1947

மறைவு: 23-04-1994

திருமதி
### நாகேஸ்வரி அம்பலவாணர்

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை 23-05-1994 காலை 4 00 மணிக்கு வில்லூன்றி தீர்த்தக்கரையிலும், பின்பு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியவர்கள், அநுதாபம் தெரிவித்தவர்கள், உதவி புரிந்தவர்கள் அனைவருக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

44/4செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர் யாழ்ப்பாணம்.

எஸ். வி. முருகேசு (தகப்பன்)
ஆ. அம்பலவாணர் (கணவர்)

(8250)


## கொழும்பு ஸ்ருடியோ
தொழில் நுட்பத்தில்
35 வருட அனுபவம் வாய்ந்தவர்கள்

தரமான
- Line Half-tone and Colour Blocks
- றபர் சீல் Rubber Stamps
- சில்க் ஸ்கிறின் Silk Screen
- Re-copy பழைய படங்களில்இருந்து புகைப்படங்களைப் பெரிதாக்க

எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்.

குறைந்த செலவில் குறுகிய காலத்தில் தரமாகப் பெற்றுக்கொள்க,

கொழும்பு ஸ்ருடியோ
55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-9395)





இரு மாதங்களுக்கொரு முறை
10 பெறுமதி மிக்க பரிசில்கள்
உங்களுக்கு காத்திருக்கின்றன.

1 ம் பரிசு சுவர் மணிக்கூடு
2 ம் பரிசு எவர் சில்வர் பொருட்கள்
3-ம் பரிசு T சேட்

மற்றும் ரூபா 200/- மேற்படாத
7 ஆறுதல் பரிசில்களாக

1. குடை
2. தொப்பி | சாப்பாட்டுப்பெட்டி
3. அல்பம் (Album)
4. பாடசாலைப் பை
5. பிளாஸ்டிக் வாளி
6. எவர் சில்வர் பேணிகள்
7. கை மணிக்கூடு

இவற்றை வென்றிட நீங்கள் செய்ய வேண்டியது இதுவே

உங்களுக்கு அருகில் உள்ள எமது போத்தல் சேகரிப்பு நிலையத்தில் பின்வரும் போத்தல்களில் யாதேனும் இரண்டைக் (2) கொடுத்து அதற்குரிய பணம் ரூ. 10/- பெறுவதுடன் ஒரு பரிசுச் சீட்டையும் இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.

போட்டிக்கு ஏற்கப்படும் போத்தல்கள்.

(1) ஜாம் (Jam) (2) கோடியல் (Cordial) (வெள்ளை / கறுப்பு)
(3) வீவா ஹொர்லிக்ஸ் (450g) பிளாஸ்டிக் மூடியுடன் (4) பியர் (Beer)

இன்றே உங்கள் போத்தல்களை எம்மிடம் விற்று
உங்கள் அதிர்ஷ்டத்தை பரீட்சித்துப் பாருங்கள்.

முதலாவது சீட்டிழுப்பு யூலை 15-ம் திகதி 1994 வெள்ளிக்கிழமை நடைபெறும் பரிசு பெறுவோரின் விபரங்கள் பத்திரிகை வாயிலாகவும், தபால் மூலமும் அறிவிக்கப்படும்

பின்வரும் இடங்களில் போத்தல்களை ஒப்படைக்கலாம்.

1. ரேஸ்ட்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட், 14, சீனியர் லேன், யாழ்ப்பாணம். 2. ஸ்கந்தா மாஸ்ரர் - வட்டுக்கோட்டை, 3. கந்தசாமி அன் சன்ஸ் - சங்கானை, 4. லிங்கம் கூல் பார் - மானிப்பாய், 5. சபாரிஸ் - சுண்டுக்குளி, 6. பேப்பர் சொப் - இருபாலை, 7. சுபாஸ் பேக் கவுஸ் - நெல்லியடி, 8. பீடா சொப் - உடுப்பிட்டி, 9. செல்வராஜா ஸ்ரோர்ஸ் - பருத்தித்துறை, 10. மாருதி - வல்வெட்டித்துறை, 11. அறிவகம் - சாவகச்சேரி, 12. வாசுகி ஸ்ரோர்ஸ் - சுண்டுக்குளி, 13. நியூ வசந்தா சின்னக்கடை 14. லங்காபதி - மல்லாகம் 15. தாஸ் ஸ்ரோஸ் - திருநெல்வேலி. 16. விநாயகர் ஸ்ரோஸ் - கல்வியங்காடு 17. ஜெயசக்தி பார்மஸி - மருதனாமடம் 18. யாழ்றன் ஸ்ரோஸ் - கொக்குவில் 19. சோதிட புத்தக நிலையம் - இணுவில் 20. கபில் உணவகம் - பளை 21. S. R. மகேந்திரன் ஸ்ரோஸ் - கோண்டாவில். 22. அம்பிகை வர்த்தக நிலையம் - திருநெல்வேலி 23. சித்திவிநாயகர் நூல் நிலையம் - ஏழாலை 24. பேரம்பலம் அன் சன்ஸ் - சுன்னாகம் 25. அன்புக் களஞ்சியம் - ஆஸ்பத்திரி வீதி, 26. டீன் ஸ்ரோஸ் உடுவில் 27. வேல் களஞ்சியம் - தட்டாதெரு 28. செல்வச்சந்நிதி ஸ்ரோஸ் - வல்வெட்டித்துறை 29. கிருஷ்ணா வர்த்தக நிலையம் - திருநெல்வேலி 30. கேதீஸ்வரன் - உடுவில்.

## ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட்
14, சீனியர் லேன், யாழ்ப்பாணம்

(சி-9454)

# அரசியல் தளம் தேடும் டி. பியும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் காமினியும்

ஐக்கிய தேசிய கட்சிக்குள் பிரேமதாசா அணியினருடன் ஏற்பட்ட அதிகாரப் போட்டியில் ஜனாதிபதி டி. பி விஜேதுங்காவின் கை ஓங்குவது தெளிவாகிவிட்டது. பிரேமதாசா அணியினர் கட்சிக்குள் பலவீனப்பட்டு வரும் அதேவேளை டி.பி விஜேதுங்காவும் அவரின் ஆதரவுத் தளமான காமினி திசாநாயக்காவின் அணியும் பலப்பட்டு வருகின்றன. அதாவது கட்சிக்குள் டி-பி-விஜேதுங்காவின்அபிலாசைகள் எதிர்பார்க்கைகள் நிறைவேறி வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தனது செல்வாக்கை நிலை நிறுத்துதல் என்பது காமினி திசாநாயக்காவை கட்சிக்குள் பலப்படுத்துவதன் மூலமே சாத்தியமாகக் கூடியது என்பதே டி. பி. விஜேதுங்காவின் முடிவாக உள்ளது. இதன் அடிப்படையிலேயே பல எதிர்ப்புக்கள் மத்தியிலும், பலர் பதவிவிலகல் மத்தியிலும், காமினி திசாநாயக்காவை பாராளுமன்ற உறுப்பினர் ஆக்குவதிலும், அமைச்சர் பதவி வழங்குவதிலும் டி. பி. விஜேதுங்கா குறியாக உள்ளார்.

ஜே ஆர் ஜெயவர்த்தனா ஜனாதிபதியாகவும் கட்சித் தலைவராகவும் இருந்த வேளையில் ஐ தே. கவிற்குள ஜே. ஆர். அணி, பிரேமதாசா அணி என இரு அணிகள் தெளிவாகவே வரையறுக்கப்பட்டு இருந்தன. ஆனால், ஜே ஆர் பதவி விலகி பிரேமதாசா பதவி ஏற்ற சிறிது காலத்தின் பின்னர், பிரேமதாசா - லலித், தலைமையிலான குழுவினருக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக, கட்சிக்குள் பிரேமதாசா - ஜே ஆர் அணிகளுக்கு இடையில் இருந்த சமநிலை பாதிக்கப்பட்டது

அன்றைய ஜே.ஆர் அணியின் தளபதிகளான லலித், காமினி போன்றோர் கட்சியை விட்டு வெளியேறியதினால் ஜே ஆர் அணி பலவீனப்பட்டது. ஆனாலும் வெளியேறிய தனது தளபதிகளை ஜே ஆர் ஜெயவர்த்தனா ஆதரிக்காமல் ஐ தே கவிற்குள் இருந்த தனது பலவீனமான அணியின் பக்கமே நின்றார்.

இந்நிலையில், பிரேமதாசா கொலை செய்யப்பட்டபோது, ஐதேகவிற்குள் ஏற்பட்ட தலைமைக்கான வெற்றிடத்திற்கு ஜே ஆர் அணியினரால் போட்டியிட முடியவில்லை. ஜே ஆர் அணிக்குத் தலைமைதாங்கியவரான தற்போதைய பிரதமர்ரணில், விக்கிரமசிங்கா அதற்கான ஆதரவுத் தளத்தை கொண்டிருக்கவில்லை. இந்நிலையில் தான், டி. பி. விஜேதுங்கா ஜனாதிபதியாகவும், கட்சித் தலைவராகவும் வருவதற்கு ஜே ஆரின் அங்கீகாரம் கிடைத்தது. இதன் மூலம் ஜே ஆர். ஜெயவர்தனாவால், பிரேமதாசா அணியினர் ஒருவர் ஜனாதிபதியாகவும், கட்சித் தலைவராகவும் வருவதையோ அன்றி பிரேமாவின் வாரிசாக அவரது குடும்பத்தினரோ -ஹேமா பிரேமதாசா அபிலாசை கொண்டிருந்தார்- ஜனாதிபதியாகவும், கட்சித் தலைவராகவும் வருவது தடுத்து நிறுத்தப்பட்டது.

ஆனால் டி. பி. விஜேதுங்காவிற்கு கிடைக்கப் பெற்ற இச்சந்தர்ப்பமானது தற்பொழுது ஐ. தே. கவிற்குள் மேலும் ஒரு அணி உருவாகவும், வளர்ச்சி பெறவும் வழி செய்துள்ளது. சகலரும் எண்ணிக்கொண்டது போல் அல்லாமல் டி. பி. விஜேதுங்கா தன்னை ஒரு இடைக்கால ஜனாதிபதியாகக் கருதாததோடு, தனக்கென ஒரு அணியையும் வாரிசையும் உருவாக்க எண்ணியதே இம் மூன்றாவது அணி உருவாக்கத்திற்குக் காரணமாகும்.

இவ்வாறாக டி. பி. விஜேதுங்கா இன்று உருவாகிவரும் மூன்றாவது அணியின் மையமாகஇருப்பவர்காமினி திசாநாயக்காவாகும்- டி. பி, விஜேதுங்கா ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது பிரேமதாசா அணியின் தலைவரான சிறிசேன கூரேயும், ஜே. ஆர். அணியின் முக்கியஸ்தரான ரணில் விக்கிரமசிங்காவும் மௌனமாக இருந்தார்கள். ஆயினும் இவர்கள் இருவரும் டி பி யிலோ, அன்றி இவர்கள் இருவரிலும் டி. பி. யோ நம்பிக்கைகொண்டிருக்கவில்லை கூரேயையும், ரணிலையும்பொறுத்து டி.பி. விஜேதுங்காஇடையில்நின்று உதவியை தட்டிக்கொண்டவர் என்ற ரீதியிலும், டி. பியைப் பொறுத்து தமது அடுத்த பதவிக் காலத்திற்குக் குறுக்கே நிற்பவர்கள் என்ற ரீதியில் கூரேயும், ரணிலும்நோக்கப்பட்டனர்.

இதற்கு ஏற்றாற்போல் கூரேயும் ரணிலும் சில வேளைகளில் இணைந்தும், சில வேளைகளில் தனித்தும் டி. பி. விஜேதுங்காவிற்கு விரோதமான செயற்பாடுகளிலும் இறங்கினர். இந் நிலையில்தான் டி. பி- விஜேதுங்காவிற்கு தனது அரசியல் எதிர்காலத்திற்கென ஒரு அணியும், பலமானதொரு வாரிசும் தேவைப்பட்டது.

இதேசமயம், லலித் அத்துலத்முதலி கொல்லப்பட்டதும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் அடுத்த தலைவரான காமினி திசாநாயக்காவினால் அக்கட்சியை தலைமை தாங்கி நடத்த முடியவில்லை, இதற்கு காமினி திசாநாயக்காவிடம் போதிய தலைமைத்துவ ஆளுமை இருக்கவில்லை என்பது மட்டுமல்ல, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்குள் இவருக்குப் போதிய விரிவான தளமும் இருக்கவில்லை ஜனநயக ஐக்கிய தேசிய முன்னணிக்குள் லலித் ஆதரவு அணியே பலமாக இருந்ததோடு, வடமேல் மாகாண முதலமைச்சர் பிரேமச்சந்திராவின் அணியும் கணிசமான பலத்தைப் பெற்றிருந்தது.

இந்நிலையில் லலித்தின் கொலையையும், அதற்கு அடுத்துவந்த மாகாண சபைத் தேர்தலில் ஐ. ஐ. தே. முன்னணி காமினியின் அரசியல் தளமாகக் கருதப்படும் மலையகத்தில் போதிய வெற்றி பெறாமையால் கட்சிக்குள் அவரது பிடியை தளர்த்தியது இவை காமினியை ஐ. தே. கட்சியின் பக்கம் இழுக்கத் தொடங்கியது. இதற்கு ஐ தே. கட்சிக்குள் ஏற்பட்டிருந்த தலைமை மாற்றமும் சாதகமாக இருந்தது.

இதேசமயம் ஐ தே- கவிற்குள் தனக்கென புதியதொரு அணியை உருவாக்க எண்ணிய டி- பி- விஜேதுங்காவிற்கு காமினியின் இம்மனமாற்றம் நம்பிக்கை ஊட்டுவதாக இருந்தது- காமினி திசாநாயக்காவும் டி- பி- விஜேதுங்காவின் நிலைப்பாட்டை உணர்ந்து அவருக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய விதத்தில் நடந்து கொண்டார்-

காமினி திசாநாயக்காவை தனது அணியின் முக்கிய தலைவராகவும், அடுத்த வாரிசாக நிலை நிறுத்துவதற்கும் டி,பி, விஜேதுங்கா முனைவதற்கு தனியாக காமினிதிசநாயக்கா நம்பிக்கை ஊட்டும் விதத்தில் நடந்து கொண்டது மட்டும் காரணமல்ல. டி பி. விஜேதுங்காவின் மனதில் ஆழமாகவேவேரோடியுள்ள கண்டியபௌத்த சிங்கள அடிப்படைவாத சிந்தனையின் வெளிப்பாடும் முக்கிய காரணமாகும், டி.பி யின் நோக்கில் தன்னைத் தவிர இன்று ஐ.தே.க விற்குள் கண்டிய பௌத்த சிங்களத் தலைமை என்பதுஇல்லை, ரணில் விக்கிரமசிங்க சிங்கள கண்டிய உயர் குழாத் தொடர்பு கொண்டவர் ஆயினும் முழுமையான கண்டிய பௌத்த-சிங்களவராகக் கருதப்படக் கூடியவரல்ல என்பதே டி பி யின் கணிப்பாகும்,

ஆகையினால் இலங்கையின் ஆட்சி அதிகாரம் கண்டிய பௌத்த - சிங்கள தலைமையின் கையிலேயே இருக்கவேண்டும் என்ற சிந்தனையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட டி பி. விஜேதுங்கா, தமது தெரிவாக ஏற்கனவே அறிமுகமாகிய கண்டிய பௌத்த - சிங்கள உயர் குழாத்தைச்சேர்ந்தஒருவரைத் தனது வாரிசாகத் தெரிவு செய்துள்ளதில் வியப்பதற்கு எதுவுமில்லை

தனது வாரிசாகக் காமினி திசாநாயக்காவைத் தெரிவுசெய்து கொண்ட டி பி. விஜேதுங்கா அடுத்த கட்ட நடவடிக்கையாக ஐ தே. கவிற்குள் காமினி திசாநாயக்காவைக் கொண்டுவரும் முயற்சியில் இறங்கினார். ஆரம்பத்தில் ஐ ஐ. தே. முன்னணியின் ஒரு தொகுதியுடன் காமினியை இணைத்துக் கொள்வதன் மூலம் உடனடியாகவே பாராளுமன்றப் பதவியும், அமைச்சரவைப் பதவியும் வழங்கலாம் என்ற எதிர்பார்க்கை டி. பியிடம் இருந்தது.

ஆனால் இது வலுவான எதிர்பைக் கொடுத்தது. ஐ. தே. கவுடன் எவரும் தனித்தனியாக இணைந்து கொள்ளலாமே ஒழிய அணியாக இணைந்து, கட்சிக்குள் தனி அணியாகச் செயற்படுவதற்கு இடம் அளிக்கப்படமாட்டாது என்பதில் பல தரப்பினரும் —டி. பி. தவிர — ஒற்றுமையாக இருந்தமையால் அம்முயற்சி பலன் அளிக்கவில்லை. இந்நிலையில் காமினியைத் தனியாகக் கட்சியில் இணைத்துக் கொள்ள டி. பி. முடிவு செய்தார்.

டி பி.யின் இம்முடிவிற்கும், எதிர்ப்புகள் இருந்தபோதும் அவை பெரியளவில் வெளிக்காட்டப்படவில்லை. ஜனாதிபதி டி. பி. முன்னிலையில் ஐந்து ரூபா செலுத்தி காமினி கட்சி உறுப்பினராகச் சேர்ந்து கொண்டார் ஆனால் காமினிக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவியும், அமைச்சர் பதவியும் வழங்கும் டி. பி. விஜேதுங்காவின் முயற்சி மட்டும் எதிர்பார்த்த வேகத்திலும், சுலபமானதுமான காரியமாக இருக்கவில்லை.

பிரேமதாசா அணியினர் வெளிப்படையாகவே எதிர்க்க முற்பட்டனர். ஜனாதிபதியின் விருப்பத்தையும் மீறி கட்சியின் செயலாளர் சிறிசேன கூரே வெளிநாடு சென்றார். வற்புறுத்தலின் பெயரிலேயே அவரை நாட்டிற்கு திருப்பி அழைக்க வேண்டிய நிலை இருந்தது அதிலும் தென்மாகாண சபைத் தோல்வியினால் டி.பி. விஜேதுங்காவின் கொள்கைகள் விமர்சனத்திற்கு உள்ளாகிய வேளையில் காமினி விவகாரம் டி பி. க்கு சவாலான அம்சமாகவே இருந்தது

ஆனால் டி பி விஜேதுங்கா இதற்காக சில கொள்கை மாற்றங்களையும் செயற்பாட்டில் மாற்றங்களையும் செய்தார். கூரேயின் எதிர்ப்பைச் சமாளிப்பதற்கு பிரேமதாசாவின் குடும்பத்தினருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டார். பிரேமா குடும்பத்திற்கு அரசியலில் சந்தர்ப்பம் வழங்கப்படலாம் என்றதொரு நிலையையும் உருவாக்கினார். ஹேமா-கூரே இருவருக்கும் இடையிலான சிறிய முரண்பாட்டையும் பயன்படுத்திக் கொண்டார்.

இதேசமயம் காமினி விடயத்தில் சிறிசேன கூரே பக்கம் சாய்ந்திருந்த ரணில் விக்கிரமசிங்கா, ஜே ஆரின் ஆலோசனையின் காரணமாக காமினி விவகாரத்தில் டி. பிக்கு எதிரான தனது நிலைப்பாட்டில் இருந்து பின் வாங்கிக் கொண்டார். இந்நிலையில் கூரே பலவீனப்பட்டு கட்சிச் செயலாளர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டியதாயிற்று.

ரணில் விக்கிரமசிங்காவின் பின் வாங்கலானது நீண்டகால திட்டத்தின் அடிப்படையிலானது என்றே அரசியல் விமர்சகர்கள்தெரிவிக்கின்றனர். காமினி திசாநாயக்காவின் வருகையானது கட்சிக்குள் தனது செல்வாக்கைப் பாதிக்கும் என்ற நிலையிலும் ரணில் பின் வாங்கியமைக்கு ஜே. ஆர். ஜெயவர்த்தனா ரணிலின் முன் ஆணித்தரமான காரணங்களை முன்வைத்தமையே காரணம் என அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகின்றது.

ஜே. ஆர் ஜெயவர்த்தனாவின் எதிர்பார்க்கையின்படி, ஐ. தே. கட்சிக்கு அடுத்த முறை எந்த வகையிலும் ஆட்சி அமைக்கும் சந்தர்ப்பம் இல்லை என்றே கூறப்படுகின்றது. இந்நிலையில் அதிகாரப் போட்டியில் இறங்கி ரணில் தலைமைப் பதவியைக் கைப்பற்றினாலும் கூட அரசியல் எதிர்காலம் வளமாக இருக்கப் போவதில்லை என்பது ஜே. ஆரின் கணிப்பாகும்- ஆகையினால் ரணில் போட்டியில் இருந்து விலக, தோல்வி அடையப் போகும் கட்சிக்குத் தலைமை தாங்கி தனது அரசியல் எதிர்காலத்தை டி. பி. விஜேதுங்காவோ அன்றி காமினி திசாநயக்காவோ அல்லது இருவருமே கெடுத்துக் கொள்வதையே ஜே. ஆர். ஜெயவர்தனா விரும்புகின்றார். ஜே ஆரின் நோக்கில் இதன் மூலம் இவர்கள் இருவரும் அரசியல் எதிர்காலத்தை இழப்பது நிச்சயம். அதிலும் குறிப்பாக காமினி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாரேயானால், காமினியின் எதிர்காலம் முற்றாக அழிந்து போகும் என எதிர்பார்க்கின்றார்-

மேலும் தற்பொழுது, டி. பி. விஜேதுங்கா - காமினி அணிக்கும், பிரேமதாசா அணிக்கும் இடையில் நடைபெறும் மோதலில், அதிகாரத்தைக் கையில் வைத்துள்ள டி. பி விஜேதுங்கா அணியே வெற்றிபெறும் என்றும் அவர் எதிர்பார்க்கின்றார்.

இந்நிலையில், அடுத்த தேர்தலானது டி. பி விஜேதுங்காவினதும், காமினி திசாநாயக்காவினதும் அரசியல் தலைமைத்துவத்தைக் கேள்விக்குரியதாக ரணில் புதுத்தென்புடன் பலவீனப்பட்ட பல அணிகளுக்குத் தலைமை தாங்கலாம் என ஜே ஆர். எதிர்பார்ப்பதாகத் தெரிகின்றது

ஜே. ஆரின் எதிர்பார்க்கைபோலவே இன்று பிரேமதாசா அணி பலவீனப்பட்டு வருகின்றது டி. பி. விஜேதுங்கா பிரேமதாசா அணியினரையும் குடும்பத்தினரையும் ஓரங்கட்டுவதில் மிகவும் குறியாக இருக்கின்றார். கூரேயின் எதிர்ப்பு பலமாக இருந்தபோது பிரேமதாசா குடும்பத்தை அணுகிய டி. பி. விஜேதுங்கா, காமினிக்கும் டீமெல்லுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் மந்திரிப் பதவியும் வழங்குவதில் குறியாக இருக்கின்றாரே ஒழிய பிரேமா குடும்பம் பற்றி அக்கறை காட்டவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

ஹேமா பிரேமதாசா தனது மகன் சஜீத் பிரேமதாசா தேசிய பட்டியல் மூலம் எம் பி ஆவதற்கு விருப்பம் தெரிவித்த போதும், சஜீத் எம் பி ஆவதற்கு தேசிய பட்டியலில் தெரிவான எம் பிக்கள் விட்டுக் கொடுக்க தயாராகஇருந்தபோதும் பிரேமாகுடும்பத்தில் ஒருவரையும் எம் பி ஆக்க டி பி விஜேயதுங்கா விரும்பவில்லை. அவர் அவ்வாறு விரும்பின் இலகுவில் அதனை செய்திருக்க முடியும் இதுவே டி. பி. யின் உள்ளக்கிடக்கையை வெளிக்காட்டும் கண்ணாடியாகும்

ஆனால் காமினிக்கும் டீமெல்லுக்கும் எம் பி பதவி வழங்க தேசிய பட்டியலில் எம் பி களைப் பதவி விலகுமாறுடிபி விஜேதுங்கா தொடர்ச்சியாக வற்புறுத்தி வந்தார். இதற்காக அவர் பெரியளவிலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியும் இருந்தது இருப்பினும் ஆரம்ப முயற்சிகள் வெற்றி அளிக்கவில்லை

இருப்பினும், தொடர்ச்சியாக காமினி திசாநாயக்காவை கட்சிக்குள் பலப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கூரேயை அடுத்து பிரேமதாசா அணியினர் பலர் உயர் பதவிகளில் இருந்து வெளியேற்றப்

பட்டனர் அதேசமயம் அவ்வெற்றிடங்கள் காமினியின் நண்பர்கள், உறவினர்கள், அபிமானிகளால் நிரப்பப்பட்டன. இதில் கட்சிப் பொதுச்செயலாளர் பதவி காமினியின் ஆதரவாளரான காமினி விஜயசேகராவிற்கும் ஜனாதிபதியின் ஆலோசகர் பதவி காமினி திசாநாயக்காவின் மைத்துனரான விக்கிரம வீர சூரியாவிற்கும் வழங்கப்பட்டமை முக்கியமானதாகும்

அத்தோடு, பிரேமதாசா அணியினருக்கு எதிராக கடும் நடவடிக்கைகளையும் எடுக்க உத்தரவிடப்பட்டது இதன் அடிப்படையிலேயே சொத்தி உபாலி கைது செய்யப்பட்டார். இது பிரேமதாசா அணியினருக்கு டி.பி. விஜேதுங்கா விடுத்த எச்சரிக்கையாகவே இருந்தது எனலாம்.

## ஜெயராஜ்

டி.பி யின் இவ் அச்சுறுத்தலுக்குப் பலன் கிட்டியது போன்றே தெரிகின்றது. எம் ஏ அமீட் பதவி விலகி காமினிக்கு பாராளுமன்றத்தில் இடம் கொடுக்க ஒப்புக் கொண்டார்: வேறொருவர் டீ மெல்லுக்காகப்பதவி துறக்க சம்மதித்துள்ளார், இந்நிலையானது டி.பி. விஜேதுங்கா ஐ. தே. கவிற்குள் எழுந்த அதிகாரப் போட்டியில் தற்பொழுது வெற்றி பெற்று விட்டார் என்றே கூறமுடியும்.

இதன் மூலம் டி. பி. விஜேதுங்கா தனக்கென ஐ. தே. கவில் ஒரு அணியையும் வாரிசையும் உருவாக்கி விட்டார்; ஆனால் அவற்றின் எதிர்காலம் இவ் வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலிலேயே உள்ளது அது ஜே. ஆர். ஜெயவர்தனா எதிர்பார்ப்பது போன்று டி. பி. - காமினி அணியைச் சிதறடிக்குமா? அல்லது ஐ. தே. கவில் ஜே, ஆர் அணியை சிதறடிக்குமா என்பதை தேர்தல் முடிவுகளே தீர்மானிக்கும்,

## மனிதனும்

னம் மார்க்சீயத்தை ஒரு வரண்ட விஞ்ஞான வாதமாக மாற்ற முனைகிறது.

மனித செயற்பாட்டை வலியுறுத்தி, மனித போராட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, சமூக முரண்பாடுகள் பற்றியும் சமூகப் புரட்சி பற்றியும் கார்ல் மார்க்ஸ் எழுதிய தத்துவார்த்த, அரசியல் நூல்களை அல்தூசர் நிராகரித்தமை மார்க்சிய சிந்தனை வளர்ச்சிக்கு இழைக்கப்பட்ட பெரும் தவறு எனக் கண்டிக்கிறார் ஆங்கில தத்துவ அறிஞரான ஈ.பி தொம்சன். மார்க்சீயத்தை 'மூலதனத்திற்குள்' மட்டும் முடக்கி அதற்கு விஞ்ஞான அந்தஸ்தை கொடுக்க முனையும் அல்தூசரின் முயற்சி, மார்க்சியத்தின் கருத்துப் பரப்பையும், செறிவையும், ஆழத்தையும் சிதைத்துவிடுகிறது என்கிறார் அவர். மார்க்சிய வரலாற்றியலுக்கு வரம்புகளைக் கட்டி, அதனை ஒரு அமைப்பியல் நியதிவாதமாக மாற்றியிருக்கிறார் அல்தூசர், என்பது தொம்சனின் குற்றச்சாட்டு. சதாஇயங்குநிலையில் உள்ளதும், சதா மாறிக்கொண்டிருப்பதுமான வரலாற்று ஓட்டத்தை விசாரணை செய்யும் ஆய்வுக்கோட்பாடுகள், காலமாற்றத்திற்கு ஏற்ப, நிகழ்வுப் போக்குகளுக்கு அமைய, மாற்றியமைக்கப்பட வேண்டும்; மிகவும் இறுக்கமான அசைந்து கொடாத, அமைப்பியல் கோட்பாடுகளால்சமூக இயக்கத்தையும் மாற்றத்தையும் செம்மையாக ஆய்வுசெய்வது சாத்தியமல்ல, என்கிறார் தொம்சன்.

வரலாறு என்பது தொடர்ச்சியாக கட்டவிழ்ந்து செல்லும் மாற்றத்தையும் வளர்ச்சிப் போக்கையும் வெளிப்படுத்தி நிற்கிறது. இந்த வரலாற்று இயக்கத்தில் மனித செயலாக்கம் பிரதானமானது. மனிதர்களின் திண்ணியமான செயற்பாட்டின் முனைப்பாகவே சமூக உறவுகளிலும் சமூக உலகத்திலும் மாற்றம்நிகழ்கிறது. இந்த வகையில், மனிதர்களே வரலாற்றின் கதாநாயகர்கள். இந்த மனிதர்களை, தனி மனிதர்களாக அல்லாமல், சமூகப் பிறவிகளாகச் சித்ரித்து, வர்க்கப் பிரிவுகளாக வகைப்படுத்தி, வர்க்க முரண்பாட்டில் மோதும் எதிர்வு சக்திகளாக இனம்கண்டு, அந்த முரணியப் போரில்கட்டவிழும் சமூக மாற்றத்தை வரலாறாகக் கற்பிக்கிறார் மார்க்ஸ். ஆனால் அல்தூசரின் மார்க்சியம், மனித செயலாக்க சக்தியை அமைப்புகளின் நிர்ணய சக்திக்குள் முடக்கிவிடுகிறது. வரலாற்றுப் பொருளியத்தை விஞ்ஞானமயமாக்கும் அவரது முயற்சி, மார்க்சீயத்தை செழுமைப் படுத்துவதற்குப்பதிலாகவறுமைப்படுத்தியுள்ளது என்றே சொல்லவேண்டும். இந்த உண்மையை சுட்டிக்காட்டும் நோக்கில்தான் ஈ.பி. தொம்சன், அல்தூசரை விமர்சித்து எழுதிய நூலுக்கு, Poverty of Theory எனத் தலைப்பு வைத்திருக்கிறார்.

இன்னொரு கோணத்திலிருந்து, மார்க்சிய வரலாற்றியலை விஞ்ஞானமாகக் கொள்ள முடியாது என வாதித்து, கார்ல் பொப்பர் (Karl Popper) என்ற தத்துவ அறிஞர் ஒரு நூலை எழுதினார். அதற்கு Poverty of Historicism எனத் தலைப்பிட்டிருக்கிறார். கார்ல் பொப்பர் என்ன சொல்கிறார் என்பதை இங்கு சுருக்கமாகப் பார்ப்போம்.

பௌதிகவியல்,வானியல், உயிரியல்போன்ற இயற்கைசார்விஞ்ஞானங்களை Natural Sciences ஒத்ததாக சமூகவியலும், அறிவியல் அந்தஸ்தை எட்டிப்பிடிப்பதற்கு முயற்சிகளை செய்துவருகிறது. ஆயினும் இயற்கைசார் விஞ்ஞானங்களைப் போன்று அவதானிப்பிலும், பரிசோதனைஆய்வு முறைமையிலும் சமூகவியலை நெறிப்படுத்துவது கடினம். அது சாத்தியமும் இல்லை என்கிறார் பொப்பர்.

சமூகம் ஒரு வித்தியாசமான உலகம். எண்ணற்ற மனித உறவுகளையும், செயற்பாடுகளையும் கொண்டதான சமூக உலகமானது ஒருமையான சீரமைப்பைக் (Uniformity) கொண்டதல்ல. அதனை ஒரு முழுமையான ஆய்வுப் பொருளாகக் கொள்ளமுடியாது. அன்றி,அனுபவத்திற்கு அகப்படும் மெய்ப் பொருளாகஎடுத்து, பரிசோதனைக்கு உட்படுத்தவும் முடியாது, என்பது பொப்பரின் நிலைப்பாடு.

அரசியல், சமூக நிகழ்வுகளை அவதானித்து, அந்த நிகழ்வுகளை காலவரிசையில் பதிவுசெய்து, அந்த வரலாற்றுப் பதிவின் அடிப்படையில் சமூகத்தின் போக்கு பற்றி பொதுவிதிகளை நிறுவி விடலாமென சமூகவியல் முயற்சிக்கிறது. இந்தப் பொதுவிதிகளின் அடிப்படையில், சமூக வரலாற்று ஓட்டம் பற்றியும், எதிர்காலம் பற்றியும் எதிர்வு கூறவும் முயற்சிக்கிறது. இந்த முயற்சி சாத்தியமானதல்ல என்கிறார் பொப்பர். இப்படியாக வரலாற்றுத் தீர்க்க தரிசனம் கூறமுனையும் அணுகுமுறையை வரலாற்றியம் (Historicism) என அவர் சாடுகிறார். மார்க்சியம் இப்படியான ஒரு சமூகத்தத்துவம்; வரலாற்று விஞ்ஞானம் அல்லது விஞ்ஞான சோசலிசம் என்றபோர்வையில் அது எதிர்காலத்தை எதிர்வு கூறமுனைகிறது என்பது பொப்பரின் குற்றச்சாட்டு.

இயற்கைசார் விஞ்ஞானம் பெருவளர்ச்சி கண்டிருக்கிறது; ஆயினும் சமூகவியல், ஒரு விஞ்ஞானக் கோட்பாடாக இன்னும் தன்னை நிறுவிக்கொள்ளவில்லை என்று பொப்பர் கூறுவது உண்மைதான். இயற்கை வேறு; மனித உலகம் வேறு. இயற்கையின் ஒழுங்கு விதிகளில், நியதிகளில் மனித உலகம் இயங்கவில்லை. எனவே இயற்கைசார் விஞ்ஞானங்களின் அடிப்படையில், ஆய்வு முறைமையில் மனித உலகத்தின் மெய்யுண்மைகளை கண்டுகொள்ள முனைவது கடினமானது என்பதும் உண்மை. அப்படியாக, விஞ்ஞான அந்தஸ்தைப் பெறாத சமூகவியல், வரலாற்றுத் தீர்க்கதரிசனம் கூறவிழைவதும் சாத்தியமல்ல. விண்வெளி விஞ்ஞானம், ஒரு சூரிய கிரகணத்தை அறுதியிட்டு எதிர்வு கூறுவதுபோல, ஒரு சமூகப் புரட்சி எப்பொழுது எந்த நேரத்தில் நிகழுமென சமூகவியலால் தீர்க்க தரிசனம் கூறி விடமுடியாது. மார்க்சிய வரலாற்றியலாலும் அது முடியாது.

மார்க்சிய சமூகவியல், வரலாற்றுத் தீர்க்க தரிசனம் கூறுவதையே தனது ஆய்வு இலக்காகக் கொண்டிருக்கிறது எனப் பொப்பர் கூறுவது ஒரு தவறான மதிப்பீடாகும். 'மூலதனத்தில்' கார்ல் மார்க்ஸ் தெரிவித்த ஒருசில தீர்க்க தரிசனக் கூற்றுக்களை ஆதாரமாகக் கொண்டு மார்க்சிய சமூக சிந்தனையை, ஒட்டுமொத்தமாக 'வரலாற்றியம்' என அவர் நிறுவ முனைவது மிகவும் அபத்தமானது.

சமூகம் என்பது மிகவும் சிக்கலான மனித உறவுகளால் பின்னப்பட்ட ஒரு விசித்திரமான உலகம் என்பதால், அதனை ஒரு பௌதிகப் பொருளாக ஆய்வுக்கூடப் பரிசோதனைக்கு எடுத்துச்செல்ல முடியாதுதான். ஆனால் அதே வேளை சமூக உலகத்தை, அறிவியல் ரீதியில் ஆய்வு செய்வது சாத்தியமற்றது எனப் பொப்பர் கூறுவதையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

பௌதிகப் பொருட்களையும் அண்டத்துக் கோள்களையும், தாவரங்களையும் ஆய்வு செய்து அறிவது போன்று மனித வாழ்வியக்கத்தை அறிந்து கொள்ளமுடியாது. சமூக மெய்யுண்மையானது மனித உறவுகளின் தளத்திலிருந்து தோற்றப்பாடு கொள்வதாலும், மனித செயற்பாடுகளினால் அது சதா இயங்குநிலையிலுள்ள அசைவியக்கத்தைக் கொண்டதாலும், சமூகத்தைஆழமாகத் தரிசித்துக் கொள்வதற்கு பிரத்தியேகமான ஆய்வுமுறைமை அவசியம். இந்தத் தேவையை, இயங்கியல் ஆய்வு முறைமை பெருமளவிற்கு பூர்த்தி செய்கிறது எனத் துணிந்து சொல்லலாம். இயங்கு நிலையிலுள்ளமெய்மையை விளங்கிக்கொள்வதற்கு இயங்குவிதிகளில் நெறிக்கப்பட்ட ஆய்வுமுறைமைதான் பொருத்தமானது. இதனால் தான் கார்ல் மார்க்ஸ் இயங்கியல் ஆய்வு முறைமையைத் தழுவிக் கொண்டார்.

மார்க்சியத்தை ஒரு விஞ்ஞானக்கோட்பாடு என்ற நிலைக்கு உயர்த்திக்காட்ட முனைவது தவறு. முன்னைய சோசலிச அரசுகளின் சித்தாந்தவாதிகளும்,சில கம்யூனிசதத்துவாசிரியர்களும் இத்தகைய மிகைப்படுத்திய பார்வையைக்கொண்டிருந்தனர் என்பது உண்மை.

தனது எழுத்துக்களையும், ஆய்வுகளையும் விஞ்ஞானக் கோட்பாடு என கார்ல் மார்க்ஸ் முத்திரை பதிக்க முயலவில்லை. விஞ்ஞானம் என்பது, என்றும் நிலைத்து நிற்கும் அழியாத மெய்யுண்மைகளைக் கொண்டதல்ல; அது சதா மாற்றத்திற்கு உட்பட்டுவரும் ஒரு அறிவியக்கம் என்ற கருத்தையே அவர் கொண்டிருந்தார். விஞ்ஞானமும்,இயங்கியலுக்கு அமைய, மாற்றமும் வளர்ச்சியும் என்ற பாதையில் முன்னேறிச் செல்லும் என்பதே அவரது நிலைப்பாடு. காலவோட்டத்திற்கமைய, வரலாற்றுச் சூழ்நிலைக்கேற்ப தனது சிந்தனையிலும் சீரமைப்பு செய்யப்பட வேண்டும் என்பதை அவர் உணர்ந்திருக்கத் தவறவில்லை. சோசலிச அரச சித்தாந்தவாதிகள் இதை புரிந்து கொள்ளவில்லை. மார்க்சியத்தை விஞ்ஞான சோசலிசம் என முத்திரை குத்தி, அதனை காலத்தால்அழியாத மெய்யுண்மையாகப் பூசித்தனர்.மாறி வரும் உலகின் மாறி வரும் வரலாற்றுப் போக்கிற்கு இசைந்துகொடுக்காது, மரபுவாதத்தை இறுக்கமாகப்பற்றி நின்றனர். இந்த இறுக்கமான பழமைவாதப் போக்கால்,சமூகத்தில் பூகம்பமாக எழுந்த பொருண்மிய, அரசியல் பிரச்சினைகளை அவர்களால் செம்மையாக எடைபோட முடியவில்லை.சோசலிசத்தின் உடைவுக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது.

சாராம்சத்தில், மார்க்சியம் ஒரு சமூக தத்துவம். அதனை ஒரு வரலாற்று விஞ்ஞானமாகக் கொள்ளமுடியாது. மார்க்சீயத்தை ஒரு சிறந்த வரலாற்று ஆய்வு முறைமையாக, ஒரு விசாரணைக் கருவியாகக் கொள்ளலாம். சமகால வரலாற்று ஆசிரியர்கள் பலர் இத்தகைய நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர்.

பல நூற்றாண்டுகாலமாக,பழமைவாதத்தில் புதைந்து நின்று இறந்த காலத்தை மட்டுமே வரலாறாக நோக்கிய வரலாற்றுத்துறையில் மார்க்சீயம் ஒரு சிந்தனை மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது என்பதை யாராலும் மறுக்கமுடியாது. நிகழ்ந்தது, நிகழ்வது, நிகழப் போவது என்றவரிசையில், வரலாற்றுக் காலத்தின் முப்பரிமாணஅகற்சியை மார்க்சீயம் தரிசித்துக்கொள்ள முனைகிறது. நிகழ்ந்து போனதும், நிகழ்காலத்தில் விரிந்து செல்வதுமான நிதர்சனத்திலிருந்து எதிர்காலத்தை படைத்துவிட அது முனைகிறது. இதன் அடிப்படையில் சமூகவியலுக்கு அப்பாலான அரசியற் பரிமாணமும் மார்க்சீயத்திற்கு உண்டு. மானிடத்தின் விடுதலையை இலக்காகக் கொண்ட புரட்சிகர அரசியற் செயற்பாட்டை அது வலியுறுத்தி நிற்கிறது.

மார்க்சீயத்தின் சிறப்பம்சம் அதன் சமூக ஆய்வுத்திறனாற்றல் மட்டுமல்ல, அதன் செயற்பாட்டு தத்துவமுமாகும். சிந்தனையுடன் செயலையும் அது வற்புறுத்துகிறது. சமூக அறிவினால் பிறக்கும்விழிப்புடன், மனித செயற்பாடும் இணைந்து கொள்ளும்பொழுதே வரலாறு உயிர்பிக்கப்படுகிறது என்ற உண்மையை மார்க்சீயம் எடுத்துரைக்கிறது.

மார்க்சீயசிந்தனையில்பலவீனங்களும்முரண்பாடுகளும் இல்லாமலில்லை. மார்ச்சீயத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் நிலவும் பல வீனத்தைஇனங்கண்டு, காலவோட்டத்தில்கட்டவிழும்வரலாற்றுப்போக்கிற்குஅமைய,அவற்றை சீரமைப்பது இன்றைய சோசலிச சிந்தனையாளரின் முக்கிய கடமையாகும், என்கிறார் பிரபல மார்க்சீய வரலாற்று ஆசிரியரான பெரிஅன்டேர்சன். தவறுகளைத் தெரிந்தும் அவற்றை மூடி மறைப்பது மார்க்சிய வரலாற்றியலுக்கு பெரும் தீங்கை விளைவிக்கும் என்பது அவரது கருத்து.

(முற்றும்)

நன்றி : வெளிச்சம்

## வல்லரசுகள் விதைத்த வினைகளால்

இன்று விமானக் குண்டு வீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்கள், எல்லாம் மக்கள் தலைமேலேயே வீழ்கின்றன.

இன்றைய ஆப்கானின் இத்தகைய சிதறு நிலை இந்தியா போன்ற அண்டை நாடுகளுக்கிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்துவதாகவே உள்ளது. குறிப்பாக இந்தியாவைப் பொறுத்தவரையில் ஏற்கனவே காஷ்மீரில் ஆப்கான் போராளிகள் போராடுவதாக முறையிடப்பட்டு வருகின்றது. இத்தகைய நிலையில் ஆப்கானின் எதிர்காலம் இந்தியாவிற்கு ஆபத்தானது என்ற குரல்கள் இப்போது புதுடில்லியில் எழுப்பப்படுகின்றது. இதுபோலவே மேற்குலகால் தமக்கு கிடைத்த பெரும் வெற்றியாக உருவகப்படுத்தப்பட்ட ஆப்கான் போராளிகள் கையில் ஆட்சி அதிகாரம் வந்தமையும் இப்போது அவர்கள் முகத்திலேயே கரிபூசுவதாக அமைந்து விட்டது. இன்னொரு பக்கத்தில் ஆப்கானில் பல மிக்க இசுலாமிய அடிப்படைவாத ஆட்சி அமையும் என எண்ணிய ஈரான் போன்ற நாடுகளின் எண்ணமும் நிறைவேறவில்லை. ஈற்றில் ஆப்கான் மக்கள் இன்று யார் யாரோவிதைத்த வினைகளை அறுவடை செய்யநேரிட்டதே மிச்சமாகின்றது.

எனவே எடுப்பார் கைப்பிள்ளைகளாக - ஏவற் படையணிகளாக - போராட்ட அமைப்புக்கள் மாறினால் விடுதலை உணர்வு என்கிற மனோபலம் அற்றுப் போனால் என்ன நடக்கும் என்பதற்கு ஆப்கான் தகுந்ததொரு பட்டறிவை தருகின்றது. முன்னர் தமிழீழத்தில் பல்வேறு குழுக்கள் இயங்கிய போது ஆப்கான் நிலைமையோடு ஒப்பிட்ட நிலை ஒன்று இருந்தது. ஆனால் இன்று இத்தகைய மோதல்கள்இங்கு தவிர்க்கப்பட்டுள்ளமை குறித்து நாம் நிச்சயம் மகிழ்ச்சி அடைய முடியும் அல்லவா?

பயிலுநர் ஆசிரியர் சேவை
போட்டிப் பரீட்சைக்கான
பயிற்சி வகுப்புகள்
திங்கள், புதன், வெள்ளி தினங்களில்
4.00 - 5.30
பாடங்கள்:
பொது அறிவு
பொது விவேகம்
ஆரம்பம்: 25-05-94
மணி 4.00
முழுக்கட்டணம் 200/-
மேலும் விபரங்கட்கு:
SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3rd CROSS STREET
JAFFNA.
(சி9462)

# புதினம்

"வரதர்'' எழுதும்
பாரதக்கதை
ஆரம்பம்
நீலவண்ணனின்
"இறுதியாத்திரை''
தொடர் சித்திரம்
மற்றும் பல

15-05-1994 இதழ் விற்பனையாகிறது.

(சி-8331)


# "வெளிச்சம்" வெள்ளி இதழ் இன்று வெளிவருகின்றது

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் மாதாந்த வெளியீடான வெளிச்சம் கலை, இலக்கிய சமூக இதழ் நூற்றி ஐம்பது பக்கங்களுடன் 'வெள்ளி இதழாக' இன்று வெளிவருகின்றது. காலத்தை உருவகிக்கும் கலைப்படைப்புகளுடன், அழகான ஓவியங்கள், புதிய அமிசங்களைத் தாங்கி வெளிவருகின்ற இவ்விதழில்-

''கால நதிக்கரையில் மீள நினைக்கின்றேன்'' சுவையான தகவல்களுடன் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வெளிச்சத்துக்கு அளித்த விசேட செவ்வியுடன் பிரம்மஞானி, பேராசிரியர் கா. சிவத்தம்பி, அடேல் ஆன், கலாநிதி, சபா, ஜெயராசா, கலாநிதி நா, சுப்பிரமணியன் வரலாற்றுத்துறை விரிவுரையாளர்களான ப புஸ்பரத்தினம், செ. கிருஷ்ணராசா மற்றும் கவிஞர் இ.முருகையன், செல்வி யசோதா பத்மநாதன் மு. இராதாகிருஷ்ணன் எழுதிய கட்டுரைகளும் கவிஞர் காசிஆனந்தன், புதுவை இரத்தினதுரை, சோ.பத்மநாதன், கருணாகரன், வீ பரந்தாமன் இளையவன், மாலிகா, முருகையன். கல்வயல் வே, குமாரசாமி, வளநாடன், உதயலட்சுமி, திருமாறன், அரசண்ணாவுடன் மற்றும் பல போராளிகளின் கவிதைகளும் சாந்தன், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், சு, மகேந்திரன், மலரன்னை, செம்பியன்செல்வன், செங்கை ஆழியான் ஆகியோரின் சிறுகதைகளும், நாக; பத்மநாதனின் உருவகக்கதையும் இடம் பெற்றுள்ளன

காற்றுவெளி, மண்ணுக்காக வீடியோப்படங்களுக்கும் 'எமது போராட்டமும் தற்சார்புப் பொருண்மியமும்' என்ற நூலுக்குமான மதிப்பீட்டுரைகளும் இடம்பெறுகின்றன

சித்திரை, வைகாசி மாதத்துக்குரிய இந்த வெள்ளி இதழ் வெளிச்சத்தின் இருபத்தைந்தாவது இதழாகும்

## காசோலை கண்டெடுப்பு

யாழ்ப்பாணம் - ஸ்டான்லி வீதி மக்கள் வங்கி கிளைக்குரிய 5485 இலக்கங்களைக் கொண்ட காசோலை ஒன்று கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது

உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்

## பிரியாவிடை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி பலராணி சண்முகராசா கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்வதை முன்னிட்டு கலாசாலை விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் இணைந்து பிரியாவிடை வைபவம் ஒன்றை இன்று சிறப்பாக நடாத்தவுள்ளனர்.


# முக்கிய அறிவித்தல்

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்
(வரையறுள்ளது)

கிளைக்குழுத் தேர்தல்-நியமனப் பத்திரம் ஏற்றல்

மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்கான நியமனப்பத்திரங்கள் 1994-05.21-ம் திகதி சனிக்கிழமை காலை 9 00 மணி தொடக்கம் 10.00 மணி வரை யா/மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலையில் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மானிப்பாய்
1994 05 19

எ. சின்னத்தம்பி
தேர்தல் உத்தியோகத்தர்.


(சி-9463)



13-வது போட்டியில் வெற்றுப் பரிசு போத்தல் பரிசு பெற்றோர் குலுக்கல் இலக்கங்கள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1863 | 3964 | 5422 | 5608 |
| 1866 | 4424 | 5425 | 5756 |
| 1878 | 4477 | 5429 | 5762 |
| 1883 | 4773 | 5431 | 5763 |
| 1885 | 4776 | 5432 | 5776 |
| 1886 | 4778 | 5506 | 5852 |
| 1889 | 4938 | 5509 | 5866 |
| 2456 | 4942 | 5601 | 5881 |
| 3775 | 4957 | 5603 | 6063 |
| 3777 | 5415 | 5604 | 6065 |

14வது போட்டியில் இன்றே பங்கு பற்றுங்கள். பங்குபற்றுவதற்கான நிபந்தனை ஜாம், கோடியல் அல்லது பியர் ஏதாவது 5 போத்தல்களை கொடுத்து அதற்கான பணத்துடன் ஒரு அதிர்ஷ்டலாபச் சீட்டையும் பெற்றுக் கொள்ளுங்கள்



TASTELINE
INDUSTRIES (PVT) LTD,
14, Seenjer Lane Jaffna
(சி-9407)


## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-05 20 - வெள்ளி இரவு

08 01 - கலை மஞ்சரி முதலில் நூல் அறிமுகம். அறிமுகமாகும் நூல் ''வேள்வித்தீ'' அதனையடுத்து சிறுகதை ''தொடரும் பயணங்கள்'' -சிறுகதையைத் தொடர்ந்து கவிதைகள்
1. இவனை அறியுங்கள்
2. விடியலை நோக்கி

08-30 - செய்திகள்

08-40 - அரசியல் அரங்கம் ''சிங்கப்பூரின் பிரம்படி தண்டனையும் மேற்குலகின் மனிதாபிமான கூச்சலும்''

08-50 - லெப்டினன்ட் கேணல் ராதா நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ஒலிபரப்பாகும்.

1994-05-21 சனி காலை

07-02 - மாவீரர் வணக்கம்
07-15 -நீங்கள் கேட்டவை
07-30 - செய்திகள்
07-35 - பத்திரிகைச் செய்திகள்
07-40- நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

# 7-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
22-12-1956

வீரச்சாவு
20-05-1987



## தளபதி லெப். கேணல் ராதா

(கனகசபாபதி ஹரிச்சந்திரா)

எண்ணம் எல்லாம் நிறைந்து
ஆண்டுகள் ஏழு பேனாலும்
மீண்டும் மீண்டும் மனக்
கண்ணில் உன் உருவம் தோன்றுதடா!
மண்ணின் விடுதலை நிஜமாகும் நாள்வரும்
கண்ணின் மணியே கலங்காதே! உன்
கல்லறையில் பூக்கள் வைத்தோம்.
களத்திற்கு விரைகின்றோம்.

15, ராதா ஒழுங்கை.
வண்ணார்பண்ணை மேற்கு,
யாழ்ப்பாணம்,

- குடும்பத்தினர்

(8318)

# சொத்தி உபாலி

சம்பவங்கள் தொடர்பாக பொலிசாரால் தேடப்பட்டுவந்த ஒருவர் பொலிசாரைக் கண்டதும் தப்பி ஓடவோ அல்லது திருப்பித் தாக்கவோ முற்படவில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கதே. கட்டுகஸ்தோட்டவில் கண்டுபிடிக்கப்பட்ட உபாலி பத்திரமாக பம்பலப்பிட்டிக்கு அழைத்து வரப்பட்டார்.

வேறு பொலிசாரிடம் சிக்குண்டால் இவர் தாக்கப்படலாம் என்பதனால் கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட விசேட குழு உபாலியைக் கைது செய்தது எனவும், இதுவும் அரசியல் வாதிகளுக்கும் பொலிசாருக்குமிடையிலான கூட்டு ஒப்பந்தத்திற்கு உதாரணம் எனவும் கூறப்படுகிறது

தற்போது பம்பலப்பிட்டி பொலிசாரின் விளக்க மறியல் கூண்டில் உபாலி அடைத்து வைக்கப்பட்டுள்ளபோதும், அவர் அணிந்துள்ள உடுப்பில் கூட எந்த விதமான கசங்கல்களும் காணப்படவில்லை என்றும், மதுபானம், சிகரட் போன்றவை அவரது பாவனைக்கு தாராளமாகக் கிடைக்கிறது என்றும் மேலும் கூறப்படுகிறது அதாவது சுருக்கமாகக் கூறின் உபாலி விளக்க மறியல் கைதி போல அல்லாமல், பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ள ஒரு நபர் போலவே நடத்தப்படுகின்றார்

இதேவேளை சொத்தி உபாலியின் சொந்தப் பாவிப்பிலிருந்த நாரஹேன்பிட்டிய வீட்டில் இருந்த பஜிரோ வாகனம், துப்பாக்கிகள் உட்பட பல பொருட்கள் மர்மமான முறையில் மறைந்துள்ளன அல்லது மறைக்கப்பட்டுள்ளன

## உபாலியின் உறவுகள்

சொத்தி உபாலி மீதான விசாரணையை பொலிசார் இதய சுத்தியுடன் மேற்கொள்வார்களாயின், உபாலியும் எந்த விதமான ஒழிப்புமறைப்புமின்றி தகவல்களை வெளியிடுவாராயின் அரசியல்வாதிகள்பலரின்குற்றவியல் நடவடிக்கைகள் அம்பலத்திற்கு வருவதைத் தவிர்க்க முடியாது எனவே இந்த விசாரணை எந்தத் திசையில் செல்லப் போகின்றது என்பது கேள்விக்குரியதே ஆனால் ஒன்று மட்டும் உண்மை சொத்தி உபாலியும் ஏனைய அவரது சகாக்களும் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டால் ஐதேகவின் அரைவாசிக்கும் அதிகமானோர் குற்றவாளிக் கூண்டில் ஏற வேண்டி வரும் இதில் யார் யார் குற்றவாளிகள்? யார் யார் சுற்றவாளிகள் என்பதல்ல முக்கியம் திரைமறைவில் இடம்பெற்ற பல விடயங்கள் அம்பலத்திற்கு வரும் குற்றச் செயல்களுக்கு எவ்வாறு திட்டமிடப்பட்டது? யார் யார்? உடந்தையாக இருந்தனர் என்பதும் வெளிச்சத்திற்கு வருவதை தடுக்க முடியாமற் போகும்)

உபாலியின் உறவுகள் தனியே அரசியல்வாதிகளுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல பிரதி பொலிஸ் மா அதிபர் ஒருவரின் நெருங்கிய சகாவாகவும், இராணுவ அதிகாரிகளின் உற்ற நண்பனாகவும் உபாலி இருந்துள்ளார் என்பதும் இப்போது தெரிய வருகின்றது

## டி. பி யின் நோக்கம்

எதிர்வரும் தேர்தல்களின்போது ஐ. தே க.வில் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய கிரிமினல்களோ, அல்லது ஊழல் பேர்வழிகளோ இல்லை என்று காட்டுவதன் மூலம் தம்மைத் தூய்மையானவன் என்று நிருபிப்பதே விஜேதுங்காவின் நோக்கமாகும். கடந்த கால ஐ. தே. கவின் ஆட்சியில் இடம்பெற்ற சீரழிவுகளுக்கும், சீர்குலைவுகளுக்கும் பிரேமதாசாவும் அவரது ஆதரவாளர்களுமே காரணம் என்பதை உணர்த்தி இந்தப் பிரச்சினைகளில் தமது கை சுத்தமானது என்று காட்டுவதன் மூலம் பிரேமதாசாவின் செல்வாக்கைச் சரித்து, அவரது விசுவாசிகளின் பலத்தைச் சிதைத்து தொடர்ந்தும் ஆட்சிபீடத்தைத் தக்க வைத்துக் கொள்ளலாம் என்பதே டி.பி யின் கற்பனையாகவுள்ளது எனலாம்.

எது எப்படிப் போனாலும் இலை முள்ளின் மீது விழுந்தாலும் முள் இலையின்மீது விழுந்தாலும் பாதிப்பு இலைக்கே என்பது போலவே இன்றைய ஐ. தே. க. வின் நிலையும் உள்ளது. குற்றச்செயல்களுடன் தொடர்புடைய கிரிமினல்கள்மீது விசாரணை நடைபெற்றாலும் அல்லது அவர்கள் விடுதலை செய்யப்பட்டாலும் பாதிப்பு அடையக்கூடிய நிலையிலேயே ஐ தே. க இப்போது உள்ளது எதனால் குறைந்த பாதிப்பு என்பதைத் தீர்மானிக்க வேண்டியதே டி. பி. விஜேதுங்காவின் பொறுப்பாக இருக்கிறது.

புதைகுழிகள் தோண்டி எடுக்கப்பட்டு சொத்தி உபாலி உட்பட தொடர்புடைய அனைவரதும் முகத்திரைகள் விலக்கப்படுமா அல்லது புதைகுழிகளின் மீது கட்டடம் அமைக்கப்படுமா என்பது இன்னமும் தெளிவாகத் தெரியவரவில்லை. எனினும் புதைகுழிகள் தோண்டப்பட்டால் பூதம் கிளம்பும் என்பதும் இப் பூதத்தைக் கட்டுப்படுத்துவது தேர்தல் ஆண்டில் கடினம் என்பதும் கவனிக்கத்தக்கது. புதைகுழியின் மீது கட்டடம் எழுப்பப்பட்டால் மக்கள் அரசியல் நாடகத்தில் ஐ. தே. க. வின் பாத்திரத்தை புரிந்து கொள்வார்கள் என்பது கண்கூடு. இந்நிலையில் ஐ. தே. க.வின் நிலை இருதலைக் கொள்ளி எறும்பு போன்றுள்ளது என்பது மட்டும் வெள்ளிடைமலை.

## பரீட்சை நிலைய மாற்றம்

(யாழ்ப்பாணம்)
மாணவ தாதிகளை ஆட் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குரியபரீட்சை நிலையம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ். கல்வித்திணைக் களம் அறிவித்துள்ளது

இதன்படி யாழ் இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள பரீட்சை நிலையம் யாழ் இந்துக் கல்லூரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது (பா)


## 17-5-94 அன்று தவறிவிட்டது

ஆலங்கேணியில் இருந்து கிளாலி வரும்போது ஆண்களின் கறுப்பு நிற பேஸ் ஒன்றுடன் அடையாள அட்டை பாஸும் இரு தங்கச்சங்கிலிகளும் பணம் 6,000 ரூபாவும் பெண்கள் அணியும் கைக்கடிகாரமும் தவறி விட்டது. தயவு செய்து இதைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது 149/1, கோயில் வீதி, நல்லூர் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்
(8336)

## "நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்"

யாத்; 15:26

## "தெய்வீக சுகமளிக்கும் கூட்டங்கள்"

உயிர்த்தெழுந்த இயேசுவின் வல்லமை
பாவம் – சாபம் - வியாதியின் கட்டுகளிலிருந்து
விடுதலை அளிக்கிறது

**இயேசு சந்திக்கிறார்**

சுவிஷேகர் நிரோஷன் அமிர்தலிங்கம் (கொழும்பு)
அவர்கள்

**தேவசெய்தி கொடுத்து ஜெபிப்பார்**

இடம்:- மான் கல்லூரி மண்டபம், உடுவில்
காலம்:- 20 - 05 - 1994 (வெள்ளி)
21 - 05 - 1994 (சனி)
நேரம்:– தினமும் மாலை 6. 00 மணி

இன மதசபை வேறுபாடற்று வியாதியஸ்தரைக்
கூட்டி வாருங்கள்

**இயேசுவே இரட்சகர்**

அப்போஸ்தலர் சபை - உடுவில்
(8326)

## யாழ் ஸ்ரீதரில்

**விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும்**
**நிதர்சனமும் இணைந்து வழங்கும்**

# மண்ணுக்காக

நடிகர்கள்:
தேவர் அண்ணா, கணேஸ், கலையரசன்
அமரசிங்கம்
பிரியா பூரணா

மழலைத் தாரகைகள் :
சி. சிவரஞ்சனி சி. சிவநிரஞ்சனா

மற்றும் பலர்

படப்பிடிப்பு & படத்தொகுப்பு:
றியோ (நிதர்சனம்)

நிழல் படம்: நகுலேஸ் (அர்ச்சுனா).
பாடல் ஒலிப்பதிவு: கிருபா (நிதர்சனம்)

பாடியவர்கள்:
விஜயன் - வேஜின் மேளின்

மூலக்கதை : வல்வையூரான்
இசை : முரளி

பாடல், படக்கதை, உரையாடல்:
நெறியாள்கை
பொன். கணேசமூர்த்தி

தினசரி மாலை 3. 00 மணி, 6. 00 மணி
சனி, ஞாயிறு காலை 10. 30 மணி,
மாலை 3. 00 மணி, 6. 00 மணி

(சி-9457)


## விண்ணப்பப்படிவம் இன்று பெறவும்

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வுக்கான விண்ணப்பப் படிவங்கள் இன்று பகல் 12-00 மணிக்கு பாடசாலை அதிபர்கள் தத்தமது கல்விக் கோட்டங்களில் பெறலாமெனவும், விண்ணப்பத்திற்கான முடிவு திகதி 31-5-94 செவ்வாய்க் கிழமை யாகும் எனவும் விண்ணப்பத்தினை குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக கல்விக் கோட்டத்தில் ஒப்படைக்கும் படியும் தேர்வுச் சபையின் செயலாளர் கேட்டுள்ளார்.

### சடலம்

இறந்தவர் தேவாலய வீதி கொக்குவில் கிழக்கை சேர்ந்த கந்தையா தெய்வேந்திரம் என அவரது தாயாரான கந்தையா சரஸ்வதி என்பவரால் அடையாளம் காட்டப்பட்டதை அடுத்து சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப் பட்டது. (சி,ச)

### வலிவடக்கு

கூட்டிவரப்பட்டனர்.

இவர்கள் 'பிளெம் பயோன்' கப்பல் மூலம் காங்கேசன் துறையிலிருந்து பருத்தித் துறைக்கு பிற்பகல் 3. 55மணிக்கு வந்து சேர்ந்தனர். நேற்று விடுவிக்கப்பட்டவர்கள் அனைவரும் சுயாதீனமாக நடக்க முடியாத நோயாளிகளான வயோதிபர்களாவர். (யோ)

### வவுனியா

திட்டத்தின் கீழ் இவர்கள் கடந்த 13-ம், 14-ம் திகதிகளில் வவுனியாவிற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் போக்குவரத்து சீரின்மையால் கடந்த 16-ம் திகதியே சென்றடைய முடிந்தது ஆனால் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்தவர்களை திருகோணமலை செல்லுமாறும், கலை, வர்த்தக மாணவர்க்கு நியமனம் வழங்கப்பட மாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலிடத்து உத்தரவுக்கு இணங்கவே நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு அனுப்பப் பட்டது எனவும், பின்னர் ரத்துச் செய்யப்பட்டது எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

### மாணவர்

மதிப்பீட்டிற்குள்ளாகும் பண்பை மாணவரிடையே வளர்த்தல், செயலனுபவங்களையும், மனப்பாங்குகளையும் மாணவர் விருத்தி செய்து நிகழ் காலத்துக்கும், எதிர் காலத்துக்கும் தம்மைத் தயாராக்கச் சந்தர்ப்பமும், பயிற்சியுமளித்தல், தேச உணர்வு மற்றும் சமூக உணர்வுகளை மாணவர் வெளிப்படுத்தச் சந்தர்ப்பமளித்தல். மாணவர் புத்தாக்கங்களை மேற்கொள்ளவும் சிறப்பாற்றலை வெளிப்படுத்தவும் ஊக்குவித்தல், மாணவர் உடல் உள ஆரோக்கிய வளர்ச்சிக்கு உதவுதல் போன்ற நோக்குடன் இத் திட்டம் நடைமுறைப் படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் ஆசிரியர் மற்றும் அதிபரால் ஒவ்வொரு மாணவருடைய நிலைகளும் மதிப்பீடு செய்யப்பட்டு ஊக்குவிக்கப்படவுள்ளது.

இதில் சேரவிரும்பும் மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இத் திட்டத்தின் கீழ் சகல துறைகளிலும் சிறந்து விளங்கும் மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளதுடன் ஏனைய மாணவர்களும் ஊக்குவிக்கப்படவுள்ளனர்-

இதற்கென பாடசாலை அபிவிருத்தி சபைகள், பொது நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவிகளும் சோரப்படவுள்ளதாக திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்- (ச)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

### கொழும்பு ஹோட்டல் குண்டுவெடிப்பு

## சர்வதேச பொலிசாரின் உதவி கோரப்பட்டது

கொழும்பு நகரிலும் கல்கிசையிலும் உள்ள ஹோட்டல்களில் இடம்பெற்ற ஹோட்டல் குண்டு வெடிப்புக்கள் தொடர்பாக சர்வதேச பொலிசாரின் (இண்டர் போல்) உதவி நாடப்பட்டுள்ளது,

இக் குண்டு வெடிப்பின் போது கொல்லப்பட்ட அந்தோனி அருள்தாசுடன் கொழும்பிற்கு வந்த இருவர் மீண்டும் கனடாவிற்குச் சென்றுவிட்டதாகவும் அவர்கள் பற்றி அறிந்து கொள்ளவே சர்வதேச பொலிசாரின் உதவியை சிறிலங்கா பொலிசார் நாடியுள்ளனர்,

இதேவேளை குண்டு வெடிப்பில் காயமடைந்த மகேந்திரன் மணிவாணன் பூரண சுகமடைந்து விட்டார் எனவும் அவரது ஒருகண் முற்றாக பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பாடசாலை மாணவருக்கு இலவச மும்மொழி அகராதி

(கொழும்பு)
இலவச பாடப் புத்தகங்களுடன் தமிழ்- சிங்கள- ஆங்கில அகராதி ஒன்றையும் அரசு வெளியிட உள்ளது. வரும் 1995 ஜனவரியிலிருந்து இந்த மும் மொழி அகராதியும் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளது; இதனை அமைச்சர் லொக்கு பண்டார தெரிவித்தார்: மும் மொழி அகராதியை அச்சிடும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

### அரசியலில்

குச் சந்தை மீண்டும் விலை வீழ்ச்சியைக் கண்டது. கடந்த வியாழன் (சென்ற வாரம்) முடிவடைந்த வர்த்தகத்தின் போது அனைத்துப் பங்குகளின் குறிகாட்டி 50 புள்ளிகளால் வீழ்ச்சி அடைந்து அத்தோடு மொத்த விற்பனையும் குறைவடைந்தது

பங்குச் சந்தையில் இவ் விலை வீழ்ச்சி அரசியலில் நிச்சயமற்ற நிலை காரணமாக, முதலீட்டாளர்கள் மத்தியில் நிலவுகின்ற கேள்வியும் பொறுத்திருந்து பார்ப்போம் என்ற மனப்பான்மையுமே காரணம் என ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்

### புதிய

மைமுற்றிலும் மாறிவிட்டது- இன்று புதிய ஓர் அரசியல் யுகத்தைப் படைக்க முற்படுவேன்- இதனால் பல எதிர்ப்புகள் கூட ஏற்படலாம். பல்வேறு கருத்துக்களைக் கொண்டவர்கள் கட்சியில் இருப்பார்கள்- இதனால் எனக்கு பதவி கிடைப்பதற்கு தாமதம் ஏற்பட்டது என மேலும் அவர் கூறினார்-

### காமினி

வையில் பதவி வழங்கப்பட்டால் அவர் உடனடியாக அரசின் மிகப்பலம் வாய்ந்த உறுப்பினர்களில் ஒருவராக வந்துவிடுவார் எனக் குறிப்பிட்டது

காமினி திசாநாயக்கா ஜனதிபதி டி- பி- விஜேதுங்காவிற்கு நெருங்கியவர்- பல ஆண்டுகால அமைச்சரவை அனுபவம் பெற்றவர்- காமினியின் அபிலாசைகள் மூத்த அமைச்சர் பதவியுடன் நின்றுவிடாது- அவரின் உயர்வு ஆளும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவை இல்லாமல் செய்வதிலும், கட்சியின் செல்வாக்கை மீண்டும் நிலைநாட்டுவதிலும் அவர் எந்த அளவில் வெற்றி பெறுவர் என்பதில் தங்கியுள்ளது - இவ்வாறு பி- பி- ஸி- செய்தியாளர் மேலும் தெரிவிக்கிறார்


## மரண அறிவித்தல்



**கணபதிப்பிள்ளை நடராசா**
(இலங்கை போக்குவரத்துச் சபை சாரதி)

தோற்றம்: 20-04-1934
மறைவு: 18-05-1994

அராலி தெற்கு மாவத்தை வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை நடராசா 18-05-94 (புதன்) அன்று காலமானார். இவர் சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், தில்லைராசா (கொழும்பு), தில்லைவதனா (ஆசிரியை - அராலி சரஸ்வதி ம வி ), சிவயோகம், தில்லைநாதன் (சுவிஸ்). மகாதேவன் (ஜேர்மன்), ரகுபதி (தொழில் நுட்பக் கல்லூரி - வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்புத் தந்தையும். கந்தையாவின் அன்பு மருமகனும், நடராசாவின் சகலனும், திருமதி நடராசா கனகம்மாவின் மைத்துனரும், செல்வராசா, சிவஞானரட்ணம், சிவபாலன், கலாவாணி, ஐங்கரன், கமலவாணி ஆகியோரின் சிறிய தந்தையும், நாகேஸ்வரி, சாவித்திரி, வன்னிய சேகரம் ஆகியோரின் அன்பு மாமனாரும், கோபிரமணா, துளசிகா, கோபிகிருஷ்ணா, சகானா, லக்ஷனா ஆகியோரின் பேரனுமாவரர். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஈமக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ந. ஐங்கரன்

(சி 9459)